பக்கங்கள்: 12
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 16 வெள்ளிக்கிழமை 02.10.2020 கதிர் 327

இனி இது ரகசியம் அல்ல!

ஒவ்வொருநாளும் அரசியல் விவகாரங்களை அலசி, வாசித்து வாசர்கள் களைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதனால் இன்று அரசியல் கிடையாது.

என்றாலும், வீட்டுக்கு வீடு மெல்லப்படும் செய்தி ஒன்று பற்றிய தகவலை உங்களுடன் பக்கம்02 »

## முற்போக்குக் கூட்டணிக்குள் 20 ஆம் திருத்தத்தால் குழப்பம்

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலத்தால் தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள் ளதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

'20' ஆவது திருத்தச்சட்ட மூலத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மனோகணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி இருக்கின்றது.

எனினும், 20 இற்கு ஆதரவளித்து அல்லது வாக்களிப்பின் போது நடுநிலைவகித்து ஆளுங்கட்சிக்கு நம்பகத்தன்மையை வெளிப்படுத்த பக்கம் 02 »

## ஐ.நா.செயலரின் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு விளக்கத்துடன் பதில்!

### ஜெனீவாவில் அறிக்கை மூலம் தெரிவிப்பு

'ஐக்கியநாடுகள் சபை, அதன் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைகள் துறையில் உள்ள பொறிமுறைகள்' தொடர்பான பொதுச்செயலாளரின் வருடாந்த அறிக்கையில் உள்ள இலங்கை தொடர்பான குறிப்பு தொடர்பாக இலங்கை அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் ஜெனீவாவில் இடம்பெற்ற ஐக்கிய பக்கம் 02 »




# பொருளாதாரத்தை நிர்வகிக்க அரசுக்குத் தெரியவேயில்லை!

## பற்றாக்குறை, விலைவாசி ஏற்றம் எல்லாம் அதனால்தான் என்கிறார் சஜித் பிரேமதாஸ

**கொழும்பு, ஒக்ரோபர் 02**

**ஸ்ரீலங்காவின் புதிய அரசாங்கத்திற்கு பொருளாதாரத்தை சரிவர நிர்வகிக்கத் தெரியாமல் தடுமாற்றமடைந்து வருவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விமர்சனம் வெளியிட்டுள்ளார். இதன் காரணமாக ஸ்ரீ லங்கா மீண்டும் மூடிய பொருளாதாரத்தை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.** பக்கம் 02 »



## சஜித் அழைத்துள்ள போராட்டத்தில் முற்போக்குக் கூட்டணி பங்குபற்றாது

(பிரபாகரன் டிலக்சன்)
நுவரெலியா,ஒக்.02

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்திற்கு எதிராக நடைபெறவுள்ள போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்து கொள்வதா இல்லையா என இதுவரையில் தீர்மானிக்கவில்லை என அக் கட்சியின் உப தலைவர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் 'காலைக்கதிர்' பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பக்கம் 02 »

## இன்று வடக்கில் கெஹெலிய

யாழ்ப்பாணம்,ஒக்.02

அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல இன்றுவடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்கிறார். இரண்டு நாள்களுக்கு நடைபெறும் பல்வேறு மக்கள் நலன் வேலைத் திட்டங்களை அமைச்சர் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது அமைச்சர் இன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் 25 ஆவது ஊடகப்பிரிவை ஆரம்பித்து வைக்கவுள்ளார். இது தொடர்பான நிகழ்வுகளில் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய பக்கம் 02 »

## பிக்கு பேராசிரியர் மோடி மீது காட்டம்

ஸ்ரீலங்காவில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூற இந்திய பிரதமர் நரேந்திரமோடிக்கு எவ்வித உரிமையும் கிடையாது .

– இவ்வாறு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

15 மில்லியன் டொலர் நிதியையும் கொடுத்து 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறும், பக்கம் 02 »

### ஈஸ்டர் தாக்குதல் குறித்து

## பூஜிதவிடம் ஏழு நாள்கள் தொடர்ந்து விசாரணை!

கொழும்பு,ஒக்.02

கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றும் ஆஜராகியுள்ளார்.

இவர் தொடர்ச்சியாக 7 ஆவது நாளாக இந்த ஆணைக்குழுவில் ஆஜராகி சாட்சியமளித்துள்ளார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆஜராகிய அவரிடம் மாலை வரை விசாரணை தொடர்ந்தது.

## பதிவு செய்யாத 'சிம்'கள் நேற்று முதல் செயலிழப்பு

இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படாத, கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட – சிம் அட்டை ஊடாகத் தொலைத் தொடர்பு இணைப்பை ஏற்படுத்தும் சாதனங்கள் அனைத்திலும் பயன்படுத்தும் – சிம் அட்டைகள் நேற்று முதல் செயலிழக்கச் செய்யப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தாங்கள் கொள்வனவு செய்யும் கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு பக்கம் 11 »

## பூநகரி வீதி 3 நாள்கள் பூட்டு

கிளிநொச்சி, பரந்தன் – பூநகரி வீதியூடான போக்குவரத்துக்கள் நாளை தொடக்கம் தொடர்ந்தும் மூன்று நாள்களுக்கு அனைத்து வகையான போக்குவரத்துக்களுக்கும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பக்கம் 02 »



## உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற இருந்த இரண்டு மாணவிகளைக் காணவில்லை

### பொலிஸார் அசமந்தம் என விசனம்

வவுனியா, ஒக்.02

வவுனியா, சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் வசிக்கும் இரண்டு மாணவிகளைக் காணவில்லை என அவர்களது பெற்றோர்கள் ஈச்சங்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச் பக்கம் 02 »

## வன்னியில் காடழிப்புத் தீவிரமாம் சீறுகின்றார் பாதுகாப்புச் செயலர்

வவுனியா,ஒக்.02

வன்னி பிரதேசத்தில் வனப் பிரதேசங்கள் தீவிரமாக அழிக்கப்படுகின்றன. இது வன்னிக்கு மட்டுமன்றி முழு நாட்டிற்குள் அபாயகரமானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கேட்போர் கூடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பக்கம் 02 »



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிமாறிக் கொள்வது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

அது வெற்றிலை விவகாரம். வெற்றிலை போடும் அன்பர்கள் எல்லாம் பாக்குப் பிரச்சினையால் போக்கிழந்து போய் நிற்கின்றனர். பத்து ரூபாய்க்கு வெற்றிலைக் கூறு கொடுத்த கடைக்காரர்கள் எல்லோரும் இப்போது முப்பது, நாற்பது ரூபா அறவிடுகின்றார்கள். விரைவில் வெற்றிலைக் கூறுவிலை ஐம்பது ரூபாவை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நானூறு ரூபாவுக்கு விற்ற கிலோ வெற்றிலைச் சீவல் இப்போது ஆயிரத்து நானூறு ரூபா. காய்ந்த கொட்டைப் பாக்கு ஒன்று, ஒன்றரை ரூபா விற்றது. இப்போது ஆறு, ஏழு ரூபா.

இரண்டு, மூன்று ரூபா விற்ற பழுப்பாக்கு இப்போது பதினைந்து, இருபது ரூபா.

இந்தப் பாக்கு விலை உயர்வால் இன்னொரு பிரச்சினையும்.

பாக்குப் பணப் பயிர் என்றாலும் அது சிறு கன்று அளவில் அழகான மரமும் கூட. அதனால் கடந்த மிலேனியத்தின் இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் – வடக்கில் – பல வீடுகளில் எல்லைச் சுவரோரத்தை அண்டி பாக்கு மரங்கள் நாட்டப்பட்டன. அவை சுவரை அண்டி குறோட்டன்கள் போல பல வீடுகளில் உயர்ந்து நிற்கின்றன. பழப்பாக்கு கொள்ளை விலைக்குப் போவதால் அதுவும் கொள்ளையடிக்கப்படுகின்றது. பார்த்திருக்க வீடுகளில் இருந்து உருவிச் செல்கிறார்கள். யாழ்ப்பாண வீடுகளில் சுவரோரங்களில் இருக்கும் கமுகு மரங்களில் காய்க்கும் பாக்குகளை அவை முற்ற முன்னரே அவற்றில் கண் வைக்கும் திருடர்கள் கமுக்கமாக அமுக்கிக் கொண்டு போய் விடுகின்றார்கள்.

நமது பத்திரிகை நண்பர் ஒருவர் வீட்டில் முன் சுவரோடு பாக்கு மரங்கள். திடீரென இருவர் சைக்கிளில் வந்தார்கள். சுவரில் சாத்திய சைக்கிளில் மிதித்து எம்பி சுவரில் ஏறினர். அதிலிருந்த படி எட்டி பக்கத்திலிருந்த கமுகு மீது ஒரு பாய்ச்சல், பிறகு இரண்டு உச்சு, உச்சிக் கமுகின் உச்சிக்குப் போயினர். ஒரே சமயத்தில் இரண்டு மரங்களில் இருந்த பழப்பாக்குளையும் இருவரும் உருவினர். கொத்தாகப் பற்றிய படி மீண்டும் சுவர் மீது பாய்ச்சல். அதிலிருந்து நழுவி சைக்கிளில் இறங்கிய இருவரும் வந்த வேகத்தில் சிட்டாகப் பறந்தனர். எல்லாம் கண் இமைக்கும் நேரத்தில் இரண்டு, மூன்று நிமிடங்களுக்குள் நடந்து முடிந்து விட்டன. வீட்டுக்குள் இருந்தபடி அதிர்ச்சியுடன் பார்த்திருந்த நம் நண்பர் விடவில்லை. மோட்டார் சைக்கிளை ‘ஸ்டார்ட்’ செய்து பாக்குத் திருடர்களைப் பாய்ந்து சென்று துரத்தி மடக்கினார் அவர். திருடர்கள் கையிலிருந்த பாக்குக் கொத்துடன் வீட்டுக்கு மீண்ட அவர் அந்தப் பாக்குகளை எண்ணிக் கணக்கிட்டார். 170 பாக்குகள் இருந்தன. அவற்றைப் பக்கத்துக் கடைக்குக் கொடுத்து மனைவிக்குத் தெரியாமல் அவர் ஆயிரம் ரூபா சுருட்டிக் கொண்டமை பிறகு நடந்த சங்கதி.

நெருக்கடி, கஷ்டம், வேலையின்மை போன்றவை எப்படி, எப்படி எல்லாம் பிழைக்க நம் மக்களைத் தூண்டுகின்றன பார்த்தீர்களா?

இறக்குமதிப் பாதிப்பு வெற்றிலை சொதப்புவர்களையும் சொதப்பி விட்டது. பாவம் அவர்கள்...!

– மின்னல் –

## இன்று வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரம்புக்வெல, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தபால் சேவைகள் வெகுஜன ஊடக தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவெவ உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஆகியோர் தலைமையில் வடக்கை கேந்திரமாகக்கொண்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக யாழ் பல்கலைக்கழகத்தில் ‘தினகரன்’ பத்திரிகை யாழ். பதிப்பை மீண்டும் புதுப்பொலிவுடன் ஆரம்பிக்கும் விழா இன்று காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதனைத்தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

## வன்னியில் காடழிப்புத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு சேவைகளை செய்துள்ளோம். இறுதி யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மூன்று லட்சம் மக்களைத் தங்க வைத்து அவர்களுக்கான நலனோம்பு வேலைகளை செய்துள்ளோம். அந்தக் காலகட்டத்தில் அவர் களைத் துரிதமாக மீள்குடியேற்றுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

அதேநேரம் நிலங்களை இழந்த மக்களுக்கு அவர்களுடைய நிலங்களில் விவசாயம் செய்ய நடவடிக்கை எடுத்தோம். அவர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுத்தோம். பிழையான வழிகளில் சென்றிருந்த இளைஞர்கள், யுவதிகளை சரியான வழியில் செல்வதற்கும் வழிகாட்டியிருந்தோம். அந்தக் கடமைகளை நாம் கச்சிதமாக செய்தோம்.

அப்போதைய வவுனியா மாவட்ட செயலாளர் சாள்ஸ் மற்றும் அப்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் றிசாத் பதியுதீன் அவர்களுடன் இணைந்து அதனை முன்னெடுத்தோம். அதனை சிறப்பாக செய்ய அரச அலுவலர்களும் கைகோர்த்து இருந்தார்கள்.

இன்று வன்னி பிரதேசத்தை பார்க்கின்ற போது மிகவும் கவலைக்கிடமான நிலையை அவதானிக்கின்றோம். இங்கு இருக்கின்ற அதிகளவிலான வனப் பிரதேசங்கள் அவசர அவசரமாக, தீவிரமாக அழிகப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் இருந்து நாங்கள் விடுபட வேண்டும். வடக்கு பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்படுவது என்பது வடக்குக்கு மட்டுமல்ல முழு நாட்டிற்கும் அபாயகரமானது. இந்த காடழிப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அரச அதிகாரிகளும் எம்மோடு கைகோர்க்க வேண்டும். பாதுகாப்புத் தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைவாக எமக்கு ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. பிரதேச மட்டத்தில் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஊடாக அதனை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அவர்களது பிரதேசங்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம். பிரதேசங்களில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்துப் பாதுகாப்பான பயணத்தை முன்னெடுப்போம்.– எனத் தெரிவித்தார்.

## உயர்தரப் பரீட்சைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வவுனியா, சாஸ்திரி கூழாங்குளம் பகுதியிலுள்ள உயர்தர வகுப்பு மாணவி ஒருவரின் வீட்டில் தங்கி நின்று சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவி ஒருவரும் கல்வி கற்று வந்தார்.

சாஸ்திரி கூழாங்குளம் பகுதியைச் சேர்ந்த மாணவியின் தாயார் கடந்த செவ்வாய்க்கிழமை காலை வேலைக்குச் சென்றிருந்தார். இந்தநிலையில், பாடசாலையில் இருந்து குறித்த இரு மாணவிகளையும் பரீட்சைக்கான அனுமதி அட்டையைப் பெற அனுப்பி வைக்குமாறு தாயாருக்குத் தொலைபேசியில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து தனது மகளின் தொலைபேசிக்குத் தாயார் அழைப்பை ஏற்படுத்தியபோது பதில் கிடைக்கவில்லை. அயல் வீட்டாருக்குத் தெரியப்படுத்தி வீட்டுக்குச் சென்று பார்க்குமாறு தாயார் தெரிவித்துள்ளார்.

அயலர்கள் வீட்டுக்குச் சென்றபோது குறித்த இரு மாணவிகளும் வீட்டில் இல்லை. குறித்த விடயம் தாயாருக்கு தெரியப்படுத்தப்பட தாயார் வருகை தந்து பிள்ளைகளைத் தேடியுள்ளார். அவர்களைக் காணாத நிலையில் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பாவற்குளம் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்து விசாரணை செய்த போதும் அவரைப் பின்னர் விடுவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட முறைப்பாட்டுப் பிரதியை பொலிஸார் வழங்கவில்லை எனவும், பொலிஸார் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றனர் எனவும் காணாமல் போன மாணவிகளின் பெற்றோர்களும், உறவினர்களும் கவலை தெரிவித்துள்ளனர். (100)

## ஐ.நா. செயலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில், இலங்கையின் பதில் வதிவிட பிரதிநிதி தயானி மெண்டிஸ் இலங்கை அரசாங்கம் சார்பாக வெளியிட்ட அறிக்கை வருமாறு: –

ஐ.நா. பொதுச்செயலாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ‘அச்சுறுத்தும் விஜயங்கள்’,‘கண் காணிப்பு’, ‘துன்புறுத்தல் தொடர்பான முறைப்பாடுகள்’ மற்றும் ‘பழிவாங்கல்கள்’ தொடர்பாக, குறித்த சம்பவங்களை விசாரணை செய்து நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக, சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு அல்லது இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு அல்லது தேசிய பொலிஸ் ஆணைக்குழு போன்ற சுயாதீனமான தேசிய நிறுவனங்களுக்கு முறையான முறைப்பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழைப்பு விடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் விரும்புகின்றது.

அரசாங்கம் ஏற்கனவே இந்தக் குற்றச்சாட்டுக்களை பகிரங்கமாக மறுத்துள்ளதுடன், கருத்துச் சுதந்திரம் மற்றும் சிவில் சமூக இடைவெளியைப் பாதுகாப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் உறுதிபூண்டுள்ள அதே வேளை, ஊடகவியலாளர்கள், மனித உரிமைகளின் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூகத்திற்கு எதிரான தாக்குதல்கள் குறித்து பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளை விசாரணை செய்து, வழக்குத் தொடருவதனை உறுதி செய்கின்றது.

தேசிய பாதுகாப்பின் நலனுக்காக வழக்கமான பாதுகாப்பு வலையமைப்புக்களை செயற்படுத்துவதனைத் தவிர, குறிப்பாக பேரழிவுகளை ஏற்படுத்திய ஈஸ்டர் ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பின்னர், பாதுகாப்புப் படைகள் மற்றும் புலனாய்வு அமைப்புக்கள் நாட்டில் எந்தவொரு குறிப்பிட்ட குழுவினரையும் கண்காணிப்பதில் ஈடுபடவில்லை என்பதும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

உலகெங்கிலுமுள்ள அடிப்படைவாத மற்றும் தீவிரமான கூறுகளின் நுட்பங்களுக்கிடையில் தேசிய பாதுகாப்பு நலன்களை இணங்கச் செய்யும் எந்தவொரு நாடும் வருந்தத்தக்க விளைவுகளை எதிர்கொள்ளும் என நாங்கள் நம்புகின்றோம். எனவே, இந்த சூழலில் அத்தகைய யதார்த்தத்தை கவனத்தில் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் அனைத்து தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றது. – என்று உள்ளது.

## பொருளாதாரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களுக்கு நன்றி கூறும் கூட்டமொன்று நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, கோட்டா – மஹிந்த அரசாங்கத்திற்கு பொருளாதாரத்தை சரிவர நிர்வகிக்கத் தெரியவில்லை என்று விமர்சித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

திம்பிரிகஸ்யாய பிரதேசத்தில் ஒரு வாடிக்கையாளருக்கு 5 தேங்காய்களை மாத்திரமே கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படும் என்கிற அறிவிப்புப் பலகையை வர்த்தக நிலையமொன்றில் அண்மையில் கண்டேன். வாகன சில்லுகளுக்கான கேள்வியும் காணப்படுகிறது.

அதேபோல மேலும் சந்தைகளில் பல பொருல்களுக்கான தட்டுப்பாடு உள்ளது. திறந்த பொருளாதாரத்தை விடுத்து மீண்டும் எமது நாடு மூடிய பொருளாதாரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. அவ்வாறு செல்வதன் விளைவாக பொருள்களின் விலைகள் அதிகரிக்கின்றன.

வாழ்க்கைச் செலவும் விண்ணுயரத்திற்கு அதிகரித்துச் செல்கின்றது. சொல்ல முடியாத நிலையில் அரசாங்கத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். நாட்டை மூடாத வகையில் சர்வதேச நாடுகளுடன் கொடுக்கல் – வாங்கலைச் செய்து நாட்டை மேலும் கட்டியெழுப்ப ஐக்கிய மக்கள் சக்தியிடம் திட்டங்கள் உள்ளன. ஆனால் இந்த அரசாங்கத்துக்குப் பொருளாதார நிர்வாகத்தைச் சரியாக செய்யத் தெரியவில்லை. – எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

## சஜித் அழைத்துள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்பிரேமதாச தெரிவித்திருந்தார்.

“இப் போராட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி கலந்து கொள்வதா இல்லையா என இதுவரை முடிவெடுக்கவில்லை. எதிர்வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரின் பின்னர் கலந்துரையாடியே முடிவுகள் எடுப்போம்.

“ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசா மீது கடந்த செவ்வாய்க்கிழமை கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்” – என தெரிவித்தார்.

## பிக்கு பேராசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய பிரதமர் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் இந்த மென்மையான கொலனித்துவத்திற்கு அடிபணியாமல் போராடி உயிர்த் தியாகம் செய்யவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்திய அணியில் இருந்து அரச உணவை உண்பதற்கு நாங்கள் தயாராக இல்லை. புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டம் ஒருபோதும் இருக்காது – என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

## பூநகரி வீதி 3...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் சி.எம். மெறாய்ஸ் அறிவித்துள்ளார்.

பரந்தன் பூநகரி வீதியில் பரந்தனிலிருந்து 12 ஆவது கிலோ மீற்றருக்கு அண்மையாக உள்ள 11/5 இலக்க இரும்பு பாலம் ஒன்றில் ஏற்பட்ட திருத்த வேலைகள் காரணமாக இந்த வீதி மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் மாற்று பாதைகளை பயன்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்

நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கும் திருத்தப்பணிகள் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு இடம் பெறும்.

இக்காலப்பகுதியில் துவிச்சக்கர வண்டி உள்ளிட்ட எந்த எந்த வாகனமும் அந்த வீதியினை பயன்படுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## முற்போக்குத் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் எனத் திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய சங்கமும், இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணியும் கருதுகின்றன.

இதன் காரணமாகவே 20 தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி தமது முடிவை அதிகாரப்பூர்வமாக அறிவிக்காமல் உள்ளது எனவும் தெரியவருகின்றது.

# சகல மாகாணங்களிலும் சிறுவர் வைத்தியசாலை நிறுவப்பட வேண்டும் என்பது அரசின் திட்டமாம்!

## பிரதமர் வெளியிட்ட அறிவிப்பு









கொழும்பு,ஒக்.02

அனைத்து மாகாணங்களிலும் சிறுவர் வைத்தியசாலையொன்று நிறுவப்பட வேண்டும் எனத் தான் எதிர்பார்க்கின்றார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கண்டி மாவட்டத்திற்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சிறுவர் வைத்தியசாலைகள், எதிர்காலத்தில் மாகாணத்திற்கொரு வைத்தியசாலை என்ற ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்டு முன்னெடுத்து செல்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகப் பிரதமர் குறிப்பிட்டார்.

சர்வதேச சிறுவர் தினம் மற்றும் றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் 125ஆவது ஆண்டு விழா என்பவற்றை முன்னிட்டு தீவிர சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை நிலையம் என்பவற்றை உள்ளடக்கிய ஒன்பது மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா மற்றும் எலும்பு மாற்று சிகிச்சை மற்றும் புதிய அறுவை சிகிச்சை கட்டட திறப்புவிழா ஆகியவற்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவரது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ இருவரும் இணைந்து சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினர்.

றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தல் மற்றும் டிஜிட்டல் மருத்துவ சிகிச்சை அமைப்பை நிறுவுதல் என்பனவும் பிரதமரின் கரங்களினால் முன்னெடுக்கப்பட்டன.

அங்கு உரையாற்றிய பிரதமர் –

'குழந்தைகள் தின கொண்டங்களை முன்னிட்டு சிறுவர் வைத்தியசாலைக்கு விஜயம் செய்யக் கிடைத்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்று விசேட வைத்திய நிபுணர்கள் இணைந்து வைத்தியசாலையின் பணிப்பாளரதும், சக வைத்தியசாலை ஊழியர்களதும் பங்களிப்புடன் இரண்டு சத்திர சிகிச்சை நிலையங்களைத் திறக்க முந்தது. இதன் மூலம் பாரிய சேவை மேற்கொள்ளப்படுகின்றது என நான் நினைக்கின்றேன்.

இதுவரை இரண்டு சிறுவர் வைத்தியசாலைகளே காணப்படுகின்றன. அது இங்கும் கண்டியிலுமாகும். சிறுவர் வைத்தியசாலைகள் குறைந்தபட்சம் மாகாணத்திற்கு ஒன்றாவது உருவாக்கப்பட வேண்டும் என எமது அரசாங்கம் உறுதியாக நம்புகிறது. எது எவ்வாறாயினும் இன்று குழந்தைகளின் ஆரோக்கியம் என்பது மிக முக்கியமானதாகும். இந்த குழந்தைகள்தான் எதிர்காலத்தில் எமது நாட்டை பொறுப்பேற்கவுள்ள தலைவர்கள். குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது எமது பொறுப்பாகும்.

பாடசாலைகளுக்கு எமது விசேட வைத்திய நிபுணர் பாதெனிய கஞ்சி வழங்குவதற்கு தீர்மானித்துள்ளார். அனைத்து பிள்ளைகளுக்கும் ஒரு கோப்பை கஞ்சி போன்ற போசாக்கான பானமொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாங்களும் கல்வி அமைச்சருக்கு முன்மொழிவொன்றை முன்வைக்கிறோம். எமது ஆட்சிக்காலத்தில் நாம் குழந்தைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுவதற்கு தயாராக உள்ளோம் என்பதை இத்தருணத்தில் ஞாபகப்படுத்த வேண்டும்.

றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருக்கும் இந்த நடவடிக்கைகளை முறையாக பராமரித்து செல்வது தொடர்பில் நாம் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம். இத்தருணத்தில் அவர்களின் சிறப்பான சேவையை நான் பாராட்டுகின்றேன். எதிர்கால தலைமுறையை பாதுகாக்கும் அற்புத பணியே உங்களால் ஆற்றப்பட்டு வருகின்றது' என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க, றிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய, விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை ஊழியர்கள், பெற்றோர், பிள்ளைகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

## பசுக்களைப் பாதுகாப்பதை ஆதரித்து யாழில் நிகழ்வு

இலங்கையில் பசுவதையைத் தடைசெய்து தெய்வீகப் பசுக்கள், இடபங்களைப் பாதுகாப்பதற்கு பூரண ஆதரவு நல்கும் நிகழ்வு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நல்லூர் நல்லை திருஞானசம்பந்த ஆதீன குருமூர்த்தி ஆலயத்தில் பிற்பகல் 3 மணிக்கு பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் கோபூசை, குருபீடாதிபதிகள் குருமார்களின் ஆசியுரை, வாழ்த்துரைகள் என்பவை இடம்பெற்றன.

இதன்போது கலந்துகொண்ட சைவ அமைப்புகளின் பிரிதிநிதிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்காக மகஜர் ஒன்றினையும் தயாரித்து கையொப்பமிட்டிருந்தனர்.

பசுக்கள், இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையம் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அகில இலங்கை இந்து குருமார் ஒன்றிய தலைவர் ஜெகதீஸ்வர குருக்கள், இலங்கை சைவ குருமார் ஒன்றிய தலைவர்

கிருபானந்த குருக்கள், ஸ்ரீ தேவி குருகுல சபரி பீட வேதாகம பாடசாலை அதிபர் சா.ஜெகதீஸ்வர சிவாச்சாரியார், தத்திரு வேலன் சுவாமிகள், இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் குருமார்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் வாடிக்கையாளர் நிலையம் திறப்பு!

கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின், யாழ் மாவட்ட வாடிக்கையாளர்களின் நலன் கருதி, வாடிக்கையாளர் சேவை நிலையம் நேற்று முன்னம் (புதன்கிழமை) கோண்டாவில் இந்து கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜா இந் நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் பி.சதீஸ்குமார், சங்கத்தின் பிரதிச் செயலாளர், வடமாகாண பிரதி முகாமையாளர், வடமாகாணப் பணிப்பாளர், மேம்படுத்தல் உத்தியோத்தர் சீ.சுதாகரன், வலய முகாமையாளர் கு.சுரேன், உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கல்விக் கூட்டுறவுச் சங்கம், கல்விசார் ஊழியர்களை நலனாகக் கொண்டு செயற்படும் ஓர் அமைப்பு. இந்நிறுவனம் இலங்கை முழுவதும் 2 லட்சத்துக்கு அதிகமான வர்கள் அங்கத்தவர்களைக் கொண்டு இயங்குகின்றது.

கல்விசார் ஊழியர்களுக்கான குறைந்த வட்டி வீதத்திலான கடன்கள், ஓய்வூதியம், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில், பல்கலைக்கழக புலமைப் பரிசில், மரணாதார கொடுப்பனவு, ஓய்வு விடுதிகள் எனப் பலதரப்பட்ட சேவைகளை வழங்கி வருகின்றது.

## தபால் திணைக்களத்துக்கு ஆண்டுக்கு 600 கோடி ரூபா இழப்பு ஏற்படுகிறது!

தபால்திணைக்களம்ஆண்டுக்கு 600 கோடி ரூபா இழப்பைச் சந்திப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், தபால் சேவைகள் அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையே சமீபத்தில் நடந்த கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் சேவைகளின் நோக்கத்தை அங்கீகரித்தால் இலங்கை தபால் திணைக்களம் தேசிய பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்குதாரராக இருப்பார்கள் என ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

பரந்த வளங்களை முறையாக நிர்வகிப்பதன் மூலம் இந்த இலக்கை எளிதில் அடைய முடியும் என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தபால் சேவைகள் மற்றும் ஊடகங்களின் தொழில் மேம்பாட்டு அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி தபால் திணைக்களம் தொடர்பாக அவதானம் செலுத்திருந்தார்.


## பாதாள உலகக்குழு உறுப்பினர் கைது

பாதாள உலகக்குழு உறுப்பினர் 'பொடி லெசிக்கு நெருக்கமானவர் ஒருவர் மீடியாகொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் எனவு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, 'பொடி லெசி' பயன்படுத்தியதாகக் கூறப்படும் கைத்துப்பாக்கி ஒன்று ஹிக்கடுவை கோனபினுவல பிரதேசத்தில் வைத்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புத்தகம் எழுதப் போகிறாராம் ரணில்



தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லுமாறு, கட்சியின் மூத்த உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது புத்தகம் ஒன்றை எழுதுவதற்கு தனது நேரத்தை செலவிட திட்டமிட்டுள்ளாராம் ரணில் விக்ரமசிங்க. மேற்படி கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார் எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இளம் உறுப்பினர்கள் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் போக்கை வழிநடத்த தயாராக உள்ளனர் என்பதையும் ரணில் விக்கிரமசிங்க கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000

மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மறுபரிசீலனை செய்யுமா புதுடில்லி?

**இலங்கை – இந்திய உறவு தொடர்பில் இலங்கை தற்போது பிரதிபலிக்கும் கருத்து நிலைப்பாட்டை இந்திய இராஜதந்திரம் சரியாகப் பரிசீலிக்குமானால், இந்த உறவு நிலையை ஒரு மறு வாசிப்புக்கு – மறு ஆய்வுக்கு – உட்படுத்த வேண்டிய தேவை எழுந்திருப்பதை புதுடில்லி நிச்சயம் உணர்ந்து கொள்ளும்.**

**இலங்கை – இந்திய உறவு நிலை பற்றிய விடயத்தில் 1987 ஜுலையில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒரு மைல் கல்.**

**வடக்கு, கிழக்கைத் தாயகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரங்களை மாகாண மட்டத்தில் பகிர்வதைப் பற்றியே வெளிப்படையாக, அந்த ஒப்பந்தம் பேசினாலும் அதையும் தாண்டி, இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்த அம்சங்களும் கூட அந்த ஒப்பந்தத்தில் ஆழமாக இழையோடியிருப்பதை அதை ஊன்றி ஆய்வு செய்பவர்கள் உணர்ந்து கொள்வர்.**

**அந்த ஒப்பந்தத்தின் பெறுபேறாக உருவாக்கப்பட்டதே அரசமைப்பின் 13ஆவது திருத்தம். அந்தத் திருத்தத்தில் கை வைப்பது என்பது ஒப்பந்தத்தில் கை வைப்பதற்கு ஒப்பானது.**

**இந்திய – இலங்கை ஒப்பந்தம் குறித்தும், அதன் பெறுபேறான 13ஆவது திருத்தம் குறித்தும் கடந்த முப்பத்திமூன்று ஆண்டுகளாக இலங்கை அரசியலில் மோசமானதும் வரவேற்பானதுமான விமர்சனங்கள் மாறி மாறிப் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டு வந்துள்ள போதிலும் –**

**அவ்வாறு பேரினவாதப் போக்கில் இவ்விடயத்தை அணுகி, அதனடிப்படையில் 13ஆம் திருத்தத்தை மோசமாக விமர்சித்து வந்த தரப்புகளிடம், அரசமைப்பை மாற்றுவதற்கான மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்றப் பலம் முன்னர் தாராளமான நிலையில் கிடைக்கவில்லை.**

**இப்போது நிலைமையில் மாற்றம். அத்தகைய பேரினவாதத் தரப்புகள் ஒன்று திரண்டு அந்தப் பெரும்பான்மையைப் பெற்றமையை அடுத்து, பதின்மூன்றாவது திருத்தத்தையும், அதன்கீழ் அதிகாரப் பரவலாக்கலுக்கு வழி செய்யும் விதத்தில் இந்தியாவுக்கு உறுதியளித்தபடி வழங்கப்பட்ட மாகாணசபை முறைமையையும் ஒழிப்பது குறித்துத் தீவிரமாகப் பேசத் தொடங்கியுள்ளன.**

**அத்தகைய யோசனைக்கும் பேச்சுக்கும் ஒரே சொல்லில் முற்றுப் புள்ளி வைக்க மிக உயர்ந்த மட்டத்தில் – பகிரங்க நடவடிக்கை ஒன்றை – இந்தியா முன்னெடுத்தது.**

**இலங்கை – இந்தியப் பிரதமர்கள் காணொலி மூலமாக இணைய வழி உரையாடலை மேற்கொண்டபோது இது தொடர்பான தனது நிலைப்பாட்டை தனது நாட்டின் தலைவர் மூலமே நேரடியாக இலங்கைத் தரப்புக்கு எடுத்துரைக்க வைத்தது இந்தியா.**

**இவ்விடயத்தில் இந்தியப் பிரதமர் மோடி பயன்படுத்திய வாசகங்கள், சொல்லாடல்கள், வசனங்கள் வேறாக இருக்கலாம். ஆனால் இராஜதந்திர ரீதியில் இந்தியா சொல்ல வந்த விடயம் தெளிவானது. உறுதியானது. ஆழமானது. அர்த்தங்கள் மிகுந்தது.**

**∗ 13ஆவது திருத்தத்தை சுலபமாக நீக்கி விட முடியாது. மாறாக, அதில் கூறியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தியேயாக வேண்டும்.**

**∗ வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு திருப்தி தரும் விதத்தில் நீதியான, நியாயமான, கௌரவ வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்.**

**– இந்தியாவின் – இந்தியப் பிரதமரின் இந்தச் செய்தியை புரிந்து கொள்ளாத மாதிரி பிரதிபலிப்பைக் காட்டுவதன் மூலம் புதுடில்லியை ஏளனப் படுத்தியுள்ளது கொழும்பு.**

**இந்தியாவின் நிலைப்பாட்டை இந்தியப் பிரதமரின் வாய்மூல உரையாடல் உத்தரவாகப் பெற்றுக் கொண்ட இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அந்த உரையாடலே தமக்கு மறந்து போய் விட்டதாகப் பிரதிபலிப்புக் காட்டியமை மூலம், இவ்விவகாரத்தில் இந்தியப் பிரதமரின் கருத்துக்குத் தாம் என்ன முக்கியத்துவம் கொடுத்துள்ளார், கொடுக்கவுள்ளார் என்பதைக் கோடி காட்டியிருக்கின்றார்.**

**இந்தியப் பிரதமர் இவ்விவகாரத்தில் இவ்வளவு நேரடியாகக் கருத்துக் கூறிய பின்னரும், இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலது கரங்களில் ஒருவரும், கடற்படையின் முன்னாள் மூத்த அதிகாரியும், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மிக மோசமான கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கமாகப் பிரதிபலித்திருக்கின்றார்.**

***"மாகாண சபைகள் விடயத்தில் இந்தியாவால் தலையிடவோ, எம்மைக் கட்டாயப்படுத்தவோ முடியாது. இலங்கை சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடு. இதில் வெளியாரின் தலையீடுகள் இருக்கக்கூடாது"* என்ற சரத் வீரசேகரவின் பதிலடி, இலங்கை – இந்தியா உறவு தொடர்பில் புதுடில்லி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதையே வலியுறுத்தி நிற்கின்றது.**

# நீதிக்காகப் போராடுவதைத் தடுப்பது மனித உரிமையை மீறும் செயற்பாடு!

### ஜெனீவாவில் பிரான்ஸ் தமிழர்கள் பண்பாட்டு அமைப்பு விசனம்

ஜெனீவா,ஒக்.02

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்த நீதிக்கான போராட்டத்தை இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் தடுத்தமையானது மனித உரிமை மீறல்களாகும் என பிரான்ஸ் தமிழர்களின் பண்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் செப்ரெம்பர் 14ஆம் திகதி முதல் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் சபையின் 45 ஆவது கூட்டத்தொடரில் அந்த அமைப்பின் சார்பாக உரையாற்றி அர்த்னா பிரபாகரன் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

உண்மை நீதியின் சிறப்பு அறிக்கையாளர் அண்மையில் வழங்கிய அறிக்கையில் தமிழர்களுக்கு நடந்த மனித உரிமை மீறல்களைப் பட்டியலிட்டமையைத் தாம் வரவேற்கின்றார் எனவும் அர்த்னா பிரபாகரன் குறிப்பிட்டார்.

11 ஆண்டுகளாக ஈழத் தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் இராணுவ ஆக்கிரமிப்பால் புதிய இலங்கை அரசும் தொடர்ந்து தமிழர்களின் வாழ்வை அழிக்கிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

மேலும் இறுதி யுத்தத்தில் குற்றங்களுக்குப் பொறுப்பான இராணுவ குற்றவாளிகளை உயர் பதவிக்கு நியமித்ததைமயை நினைவுபடுத்திய அவர், தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்கவும் உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு கீழ் செயற்படவும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தவும் பாதுகாப்பு அமைச்சை நியமிப்பது மிகவும் கவலையைத் தருகிறது எனவும் கூறினார்.

சிங்கள,பௌத்த தேசியத்தை அரசு பாதுகாத்து வளர்ப்பதால் ஈழத்தமிழர்கள் மேலும் ஓரங்கட்டப்படுகின்றனர் என்றும் இலங்கை ஜனாதிபதியின் தொல்லியல் செயலரணியில் 6 பௌத்த துறவிகளை மேலும் சேர்த்தபோதும் ஒரு தமிழரைக்கூட அதில் இணைக்கவில்லை என்றும் அர்த்னா பிரபாகரன் சுட்டிக்காட்டினார்.

இலங்கை இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஓகஸ்ட் 30 ஆம் திகதி உலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் நாளை நினைவுகூர இராணுவமும், பொலிஸாரும் நெருக்குதலுக்குள்ளாக்கி நீதிமன்றத்தின் ஊடாகத் தடைசெய்தனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த செயலானது அரசின் தமிழின அழிப்பிற்கெதிரான நீதிக்காகப் போராடுவதை தடைசெய்தமையும் மனித உரிமை மீறலாகும் என அர்த்னா பிரபாகரன் தெரிவித்தார்.

# தமது காணிகளை விடுவிக்குமாறுகோரி கேப்பாபிலவு மக்கள் மகஜர் கையளிப்பு!

### முல்லைத்தீவு அரச அதிபரிடம்

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட அர சாங்க அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை மாவட்ட செயலகத் திற்குச் சென்ற இந்த மக்கள், மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்து கலந்துரையாடியமையுடன் ஜனாதிபதி, வடமாகாண ஆளுநர் உள்ளிட்டவர்களுக்கான மகஜரையும் கையளித்துள்ளனர்.

பல வருடகாலமாகத் தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர் எனவும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாட சாலை, சுடுகாடு, தேவாலயம் உள்ளிட்ட மக்களின் முக்கிய குடியிருப்புக்கள் இராணுவக் கட்டுப்பட்டிலேயே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கட்டுநாயக்க விமான நிலைய 2 ஆவது முனையத்தின் கட்டுமானப் பணிகளை 2023 இல் முடிவுறுத்த பணிப்பு

நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையமான கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணிகளை எதிர்வரும் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் குறித்து ஜனாதிபதி செயலகத்தில் புதனன்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணி 2017 ஆம் ஆண்டு நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் இதன் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடிக்கும் அதிகமான பயணிகளுக்கு சேவையை வழங்க முடியுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி

க.பொ.த உயர் தரப் பரீட்சையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சைகள் ஆணையாளர் பீ. சனத் பூஜித இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர் –

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் நவம்பர் 6 ஆம் திகதி வரை க.பொ.த உயர் தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. இந்நிலையில், நாடு முழுவதும் உள்ள 2,648 நிலையங்களில் பரீட்சை இடம்பெறும்.

இதேவேளை, ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 11 ஆம் திகதி நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 2,936 நிலையங்களில் நடைபெறும்.

இந்த பரீட்சைகளின் போது கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் குறித்து ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால், தேவையான முன்னெச்சரிக்கைகள் மற்றும் சிகிச்சைகள் சுகாதார அமைச்சகத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படும் – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பில் 1500 ஏக்கர் மேய்ச்சல் தரை பறிபோவதைத் தடுத்தார் சாணக்கியன் எம்.பி.



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 1,500 ஏக்கர் மேய்ச்சல் தரைக் காணிகளை சிங்கள மக்களுக்கு வழங்கும் திட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தற்காலிகமாக தடுத்து நிறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு எல்லை பகுதியான மயித்தமடு, மாதவனை பகுதிகளில் உள்ள மேய்ச்சல்தரை காணிகள் அம்பாறை, பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்களுக்கு விவசாயம் செய்வதற்கு வழங்கப்படவிருந்தது.

கிழக்கு மாகாண ஆளுநர், மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்திடம் அம்பாறை, பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு சோளம் பயிர் செய்கை செய்வதற்கு என சுமார் மூவாயிரம் ஏக்கர் காணிகளைக் கோரியிருந்தார்.

அதன் முதல் கட்டமாக 1500 ஏக்கர் காணிகளை வழங்க மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் இணக்கம் தெரிவித்து அதனை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வந்ததன.

இந்நிலையில் இந்தச் விடயம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகங்களின் ஒன்றியம் மற்றும் பண்ணையாளர்கள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

நேற்று (புதன்கிழமை) கொழும்பில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் எஸ்.பெரேராவை சந்தித்து மேற்படி விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கலந்துரையாடினார்.

இவ்வாறு கால்நடைகளை வளர்ப்பதற்காக பயன்படுத்தப்படும் மேய்ச்சல் தரைகளை வெளி மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு விவசாயம் செய்ய வழங்கினால் மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்கள் தங்களிடம் உள்ள மாடுகளை மேய்ப்பதற்கு இடம் இல்லாமல்போகும் எனவும், பால் உற்பத்தி இல்லாமல் போவதுடன் அது அரசாங்கத்தின் சுய தொழில் திட்டங்களை வெகுவாகப் பாதிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே உடனடியாக மேய்ச்சல் தரை காணிகளை விவசாயத்திற்கு வழங்குவதை தடுத்து நிறுத்துமாறும், இல்லை என்றால் தான் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் போகிறார் எனவும் இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார் என அறிய வருகின்றது.

இந்நிலையில் இந்தத் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாகக் கூறிய மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், இது தொடர்பாக ஆராய்வதற்கு தனது உயர் அதிகாரிகளை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அனுப்பி மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதாகத் தன்னிடம் உறுதியளித்துள்ளார் என இரா.சாணக்கியன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

# அதிக வலு மின் கம்பத்தில் ஏறி எதிர்ப்புப் போராட்டம்



வெல்லம்பிட்டி – நாகஹமுல்ல சந்தியில் மின் கம்பம் ஒன்றில் ஏறி நபர் ஒருவர் எதிர்ப்பு நடவடிக்கையில் நேற்று மாலை வரை ஈடுபட்டிருந்தார்.


இந்த மின் கம்பம் அதிக வலுகொண்ட மின்சார இணைப்புடையதெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரின் எதிர்ப்பு நடவடிக்கைக்குக் காரணம்உடனடியாகக்கண்டறியப்படவில்லை.

அத்துடன், அந்தப் பகுதிக்கு தீயணைப்பு பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**இன்று காந்தி ஜெயந்தி**

# நெஞ்சமெலாம் மகாத்மாவாய் நிறைந்திட்டார் காந்தி!



கத்தியும் ரத்தமும் கையெடுக்கா மனிதர்
சத்தியமாய் உருக்கொண்ட உத்தம மனிதர்
சொத்தாக சுதந்திரத்தை உளங்கொண்ட மனிதர்
இத்தரையில் வரமாக வந்தமைந்தார் காந்தி

தேசபிதா எனவழைக்கும் சீர்மையுடை மனிதர்
காசுழைக்கும் தொழிலதனை கண்டிடா மனிதர்
மாசுடைய மனமதனை வாழ்வேற்கா மனிதர்
மாநிலத்தில் காந்தியாய் வந்தாரே சிறக்க

எளியவுடை இன்புடனே ஏற்றிட்ட மனிதர்
ஏழைகளை கையணைத்து வாழ்ந்திட்ட மனிதர்
பழிகண்டு துணிவோடு களைத்திட்ட மனிதர்
பார்போற்ற காந்தியாய் பரிமளித்தார் வாழ்வில்

அடியுதையை அகிம்சையால் அடக்கிட்ட மனிதர்
அடிமையெனும் பேயதனை அழித்திட்ட மனிதர்
கொடுமையெனும் ஆட்சியினை குலைத்திட்ட மனிதர்
குவலயத்தி குணக்குன்றாய் காந்தியென வந்தார்

பதவிகளை மனமேற்றா பார்வாழ்ந்த மனிதர்
புனிதமுடை நூலனைத்தும் உளங்கொண்ட மனிதர்
தனிமனித சுயலாபம் தேடாத மனிதர்
தரணிதனில் காந்தியாய் தலைநிமிர நின்றார்

தீண்டாமை அரக்கனை தீயிட்ட மனிதர்
தீமைதரும் மதுவதனை வெறுத்திட்ட மனிதர்
சான்றாண்மை வாழ்வில் காத்திட்ட மனிதர்
சன்மார்க்கம் தளைக்கவே காந்தியாய் வந்தார்

உழைப்பதனை உன்னதமாய் உணர்ந்திட்ட மனிதர்
உப்பதனை முதலாக்கி உளமிணைத்த மனிதர்
நீதியினை புறந்தள்ளா நினைத்திட்ட மனிதர்
நெஞ்சமெலாம் மகாத்மாவாய் நிறைந்திட்டார் காந்தி

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் ஆஸ்திரேலியா

# போலியான குற்றச்சாட்டு பொலிஸார் முன்வைப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

## மட்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை

போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் உட்பட ஆறு பேரை நீதிமன்றில் ஆஜராகுமாறு கடந்த 27ஆம் திகதி அழைப்பாணை அனுப்பிவைக்கப்பட்டிருந்தது..

எதிர்வரும் 02 ஆம் திகதி (இன்று) காலை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு மட்டக்களப்பு நீதி மன்றம் ஊடாக இந்த அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், சீ.யோகேஸ்வரன்,பா. அரியநேத்திரன் மற்றும் ஜனநாயப்போராளிகள் கட்சியின் உபதலைவர் நா.சங்கரப்பிள்ளை ஆகியோருக்கு இந்த அழைப்பானை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் திலீபன் என்பவரை நினைவு கூரும் முகமாக இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட நபர்களால் விளக்கு ஏற்றும் நிகழ்வை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பில் வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்த அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

எனினும் தாங்கள் எந்த வித நிகழ்வையும் ஏற்பாடு செய்யாத நிலையில் தம்மீது பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் எனத் தெரிவித்து மட்டக்களப்பில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நா.சங்கரப்பிள்ளை ஆகியோர் முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளனர்.

பொலிஸார் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு உண்மைக்குப் புறம்பான வழக்காகும். திலீபனின் நினைவு தினத்தை நாங்கள் அனுஷ்டிக்க இல்லை, ஆனால் நாங்கள் அனுஷ்டிக்க நினைத்தோம் என வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

ஏற்கனவே தடையுத்தரவு ஒன்றை இரவு வேளைகளில் வீடுகளுக்கு கொண்டு வந்து தந்திருந்தார்கள். திலீபனின் நினைவு தினத்தை செய்யக்கூடாது என்ற தடையுத்தரவை 25 ஆம் திகதி இரவு தந்திருந்தார்கள். அவ்வாறு இருக்கத்தக்கதாக அந்த நிகழ்வு நடைபெறாத நிலையில் நாங்கள் அதனை நடத்துவதற்கு எத்தனித்ததாக இந்த குற்றச்சாட்டு எங்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

உண்மைக்கு புறம்பான குற்றச்சாட்டாக இருக்கின்ற காரணத்தால் எங்களது முறைப்பாட்டை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடாகப் பதிவுசெய்துள்ளோம். இந்த வழக்கிற்கு முகம்கொடுப்பதற்கு நாங்கள் தயாராகயிருக்கின்றோம். இந்த நாட்டில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுகின்றமை என்பது மனவேதனைக்குரியதாக இருக்கின்றது. கடந்த காலத்தில் இந்த விடயங்கள் சர்வசாதாரணமாக நடைபெற்றன. தற்போது பல்வேறு தடைகள், முட்டுக்கட்டைகள் போடுகின்றமை என்பது கவலைக்குரிய விடயமாகும் எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்



# மன்னார் நானாட்டானில் கிடைத்த பண்டையகால நாணயங்கள் தமிழகப் பாண்டியருக்கு உரியவையா?

**18.09.2020** அன்று மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் சந்திக்கு அருகில் உள்ள வடக்கு வீதி என்ற இடத்தில் வீடு கட்டுவதற்காகக் குழிகள் வெட்டியபோது ஒரு குழியில் காணப்பட்ட பானையில் இருந்து 1904 செப்பு நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்ற செய்தி 25.09.2020 அன்றிலிருந்து ஊடகங்களில் முக்கிய செய்தியாக காணப்படுகின்றது.

இந்நாணயங்களை அச்சத்துடன் பார்த்த அக்கிராம மக்கள் பூதம் பாதுகாத்து வந்த இந்நாணயங்களை வீட்டில் வைத்திருப்பது ஆபத்து என கூறியதால் அவற்றால் அச்சமடைந்த நானாட்டான் பிரதேச சபையின் உபதவி சாளர் திரு. புவனம் அவர்கள் அந்நாணயங்கள் அனைத் தையும் தற்போது முருங்கன் பொலிஸ் பொறுப்பதி காரியிடம் ஒப்படைத்துள்ளார். அந்நாணயங்கள் நீதி மன்றத்தின் ஊடாக இலங்கைத் தொல்லியற் திணைக் களத்திடம் ஒப்படைக்க இருப்பதாக அறிகின்றோம்.

வடஇலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான நாணயங்கள் முதன் முறையாக ஒரேயிடத்தில் கிடைத்தி ருப்பதால்அந்நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தை யாவது பார்ப்போம் என்ற ஆவலில் மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் மற்றும் நானாட்டான் பிரதேச சபையின் உபதவிசாளர் புவனம் அவர்களுடன் தொடர்பு கொண்ட போது அவர்கள் உரிய இடத்தைப் பார்வையிடுவதற்கான சகல வசதிகளையும் ஏற்படுத் தித் தந்தனர். இக்கள ஆய்வில் எனது மாணவர்களும் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர்களுமான கபிலன், மணிமாறன், தசிந்தன், கிரிகரன் ஆகியோருடன் நானாட் டான் பிரதேச செயலாளர் சிறிஸ்கந்தகுமார், நானாட்டான் பிரதேசசபை உறுப்பினர் ஜொனி, மதகுரு அருண் புஸ் பராஜ், அக்கிராமத்து இளைஞர்களான செல்வம், கணேஸ் மற்றும் ஜெயசீலன் ஆகியோரும் எம்முடன் இணைந்து ஆர்வத்துடன் களவாய்வில் பங்கெடுத்தமை மகிழ்ச் சியளிப்பதாக இருந்தது.

நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் பல குழிகள் தோண்டப்பட்டுள்ளன. ஆனால் அக்குழிகள் எவற்றிலுமே புராதன குடியிருப்புக்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக இக்குழிகளில் காணப்படும் களிமண் அருகிலுள்ள காணிகளின் மண் ணின் நிறத்தில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக காணப்படுகின்றது. இது பற்றி வீட்டு உரிமையாளரிடம் கேட்டபோது இற்றைக்குப் 15 ஆண்டுகளுக்கு முன்னர் இம்மண்ணை அருகில் உள்ள குளத்தில் இருந்து கொண்டு வந்து கொட்டியதாகக் கூறினார். இதனால் இங்கு பானையோடு கிடைத்த நாணயங்கள் குளத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணோடு வந்தவை என்பது உறுதியாகத் தெரிகின்றது.

இந்நாணயங்களில் மீன் சின்னங்களும், வாளும் பொறிக்கப்பட்டுள்ளமையால் இவற்றைப் பாண்டியர்



முடியாட்சிக்குரிய நாணயங்கள் என ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. தற்போது தென்னி லங்கை ஊடகங்களில் இவை அநுராதபுர இராசதானிகால நாணயங்கள் எனவும் செய்திகள் வெளிவருவதாக அறிகின்றோம்.

இந்நாணயங்கள் அனைத்தையும் நேரில் பார்வை யிட இன்னும் எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆயினும் முருங்கன் பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி நானாட்டான் பாடசாலை ஒன்றில் காட்சிக்கு வைப்ப தற்காகக் கொடுத்த நாணயங்களையும், களவாய்வின் போது எமக்கு கிடைத்த இரு நாணயங்களையும், ஊட கங்களில் வெளிவந்த நாணயங்களின் புகைப்படங்க ளையும் வைத்துப் பார்க்கும் போது இந்நாணயங்களின் முன்பக்கத்தில் மூன்று கோடுகளால் வடிவமைக்கப்பட்ட பீடத்தின் மேல் இடப்பக்கமாக அல்லது வலப்பக்கமாக பார்த்த நிலையில் படுத்திருக்கும் நந்தியின் உருவமும், இதற்கு இரு புறத்திலும் குத்துவிளக்கும், நந்தியின் தலைக்கு மேல் பிறைச் சந்திரனும், நாணய விளிம்பை ஒட்டி சிறுபுள்ளிகளும் காணப்படுகின்றன.

நாணயத்தின் பின்பக்கத்தில் பீடத்தின் மேல் கிடையாக அல்லது நேராக இரண்டு மீன் சின்னங்களும் இவற் றின் இரு புறத்திலும் குத்துவிளக்கும், விளிம்பை ஒட்டி பிறைச் சந்திரனும், சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன. ஆயினும் நாணயங்களின், அளவு, நிறை, வடிவமைப்பு, அழகு, தெளிவு என்பவற்றில் வேறுபாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இவ்வகையான நாணயங்கள் இலங்கையில் சிறப் பாக வடஇலங்கையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. அவற்றைப் பிரின்செப் (1858), எலியட் (1858), கொட்றிங்ரன்(1924), டுல்பே(1966), மிச்செனர்(1998) முதலான நாணயவியல் அறிஞர்கள் விரிவாக ஆராய்ந்துள்ளனர். சேயோன் என்ற நிலவியலாளர் வடஇலங்கையில் மாதோட்டம், மன்னார், கந்தரோடை முதலான இடங்களில் இருந்து நூற்றுக்கணக்கான இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து 1982 இல் வெளியிடப்பட்ட தனது 'இலங் கையின் பண்டைய கால நாணயங்கள்' என்ற நூலில் ஆவணப்படுத்தியுள்ளார். 1997 களில் பேராசிரியர் கிருஷ்ணராஜா கந்தரோடையில்மேற்கொண்ட தொல்லி யல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

1990 களில் இருந்து வடஇலங்கையில் மேற்கொள் ளப்பட்ட எமது தொல்லியல் மேலாய்வின் போது பூநகரி, ஈழவூர், மாதோட்டம், உடுத்துறை, இயற்றாலை, அண் மையில் கட்டுக்கரை முதலான இடங்களிலும் இவ்வகை நாணயங்கள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இக்கண்டுபிடிப்புக்களின் தொடர்ச்சியாக நானாட்டானில் கிடைத்த நாணயங்கள் காணப்பட்டாலும் அவை வகை யிலும், தொகையிலும் அதிகமாக இருப்பதால் வடஇலங் கையின் வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வில் இந்நாண யங்கள் அதிக முக்கியத்துவம் பெற இடமுண்டு என்பதில் ஐயமில்லை.

பொதுவாகப் பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னர் - அதா வது யாழ்ப்பாண அரசின் தோற்றத் திற்கு முன்னர் - இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாண யங்களை தமிழகத்துடனான அரசியல் வாணிபத் தொடர்பால் வந்தவை என்றே கூறப்பட்டு வந் துள்ளது. இதற்கு யாழ்ப்பாண அரசின் தோற்றத்தின் பின்னரே இலங்கைத் தமிழரிடம் நாணயங் களை வெளியிடும் மரபு தோன்றி யது என்ற நம்பிக்கை முக்கிய கார ணமாகும்.

ஆனால் இலங்கையின் சம காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக் கள் சங்க காலத்தின் சமகாலத்தில் இருந்து தமிழகத்தைப் போல் இலங்கைத் தமிழரிடமும் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றி வளர்ந்ததற்கு உறுதியான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

அண்மையில் நானாட்டானில் கண்டுபிடிக்கப்பட்ட நாணய வகைகளை பத்தொன்பதாம் நூற்றாண்டிலி ருந்து ஆய்வு செய்த அறிஞர்கள் பலரும் அந்நாணயங் கள் வடஇலங்கையில் கிடைத்தன என்றே கூறுகின்றனர். இவற்றின் எண்ணிக்கை யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்களின் எண்ணிக்கையை விடப் பல மடங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. வடஇலங்கைக்கு வெளியே இவ் வகை நாணயங்கள் மிக அரிதாக அநுராதபுரத்திலும், அக்குறுகொட என்ற இடத்திலும் கிடைத்துள்ளன. தமிழ் நாடு சென்னை அருங்காட்சியகத்தில் இவ்வகையான நான்கு நாணயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவையும் யாழ்ப்பாணத்தில் இருந்தே பிற்காலத்தில் பெறப்பட்டன எனக் கூறப்படுகின்றது. இதனால் நானாட் டானில் கிடைத்த நாணய வகைகளை வடஇலங்கை யில் இருந்த அரசோடும், ஆட்சி செய்த அரசர்களோடும் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். இந்நாண யங்களில் பொறிக்கப்பட்டுள்ள சிற்பங்கள், சின்னங்கள், குறியீடுகள் முதலியன இந்து மதத்தை - சிறப்பாக சைவ சமயத்தை - பிரதிபலிப்பதால் இந்நாணயங்களை வெளியிட்ட அரசின் மதமாக இந்து மதம் இருந்துள்ள தெனக் கூறலாம்.

இதுவரை காலமும் இந்நாணயங்களை ஆய்வு செய்த நாணயவியல் அறிஞர்களில் ஒருசாரார், நாண யங்களில் மீன் சின்னங்கள் காணப்படுவதால் இவை பாண்டியரால் வெளியிடப்பட்டு தமிழகத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

இன்னொரு சாரார் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளமாக இந்நாணயங்களை வெளியிட்டிருக்கலாம் எனக் கூறுகின்றனர். வேறு சிலர் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்கள் சம காலத்தில் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாண யங்களில் இருந்து சில தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பதால் இவற்றைப் பாண்டியர் வடஇலங் கைக்கென வெளியிடப்பட்ட தனித்துவமான நாணயங் கள் எனக் கருதுகின்றனர். ஆயினும் இக்கருத்துக் கள் பொருத்தப்பாடாகத் தோன்றவில்லை. காரணம் தமிழகத்தில் சங்ககாலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் பெரும்பா லும் புழக்கத்தில் இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

ஆனால் வடஇலங்கையில் அதிக எண்ணிக்கை யில் கிடைத்துள்ள மீன் சின்னங்கள் பொறித்த ஒரு நாணயமாவது தமிழக ஆய்வுகளில் கிடைத்ததாகத் தெரியவில்லை. இவை தமிழகத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களாக இருந்தால் வடஇலங்கையைக் காட் டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்கவேண்டும். ஒன்பதாம் நூற்றாண்டிலி ருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை பாண்டியர் இலங்கை மீது பல தடவைகள் படையெடுத்ததற்குப் பாளி இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் ஆதாரங் கள் காணப்படுகின்றன. இப்படையெடுப்புக்கள் மூலம் சோழரைப் போல் பாண்டியர் ஆட்சி இலங்கையில் ஏற்பட்டதற்கு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை. மாறாக இப்படையெடுப்புக்கள் மூலம் இலங்கை மன் னர்களிடம் பாண்டியர் திறைபெற்றமைக்கே சான்றுகள் காணப்படுகின்றன. இதனால் இலங்கையில் பாண்டியர் ஆட்சி இருந்ததன் அடையாளம் இந்நாணயங்கள் வெளியிடப்பட்டவை எனக் கூறுவது ஏற்புடையதாகத் தோன்றவில்லை. வடஇலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்கள் தனித்துவ மானவை என்பதில் நாணயவியல் அறிஞர்களிடையே மாற்றுக் கருத்துக்கள் காணப்படவில்லை. அத்தனித் துவம் பாண்டியருக்குரியதல்ல. மாறாக இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காணப்படும் தனித்துவமான அம்சமாகப் பார்ப்பதே பொருத்தமாகும்.

நானாட்டானில் கிடைத்த நாணய வகைகள் வட இலங்கைக்கு வெளியே மிக அரிதாக தென்னிலங் கையிலும், தமிழகத்திலும் கிடைத்துள்ள நிலையில் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களின் எண் ணிக்கை பல ஆயிரமாகக் காணப்படுகின்றன. இந்த எண்ணிக்கை யாழ்ப்பாண இராசதானி காலத்தில் வெளியிடப்பட்ட சேது மொழி பொறித்த நாணயங்களை விடப் பல மடங்கு அதிகமாக உள்ளன. இதையே நானாட்டானில் கிடைத்த நாணயங்கள் மேலும் உறுதி செய்கின்றன.

இலங்கையில் நாணயங்களை வெளியிடும் மரபு தோன்றுவதற்கு இந்தியத் தொடர்பு முக்கிய காரண மாக இருந்தாலும், பண்டுதொட்டு இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. தமிழகத்தில் சங்ககாலப் பாண்டியர் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களில் முன்பக்கத்தில் நிற்கும் நிலையில் காளையின் உருவமும், நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் அரச இலச்சினையான மீன் சின்னமும் காணப்படுகின்றன. சமகாலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட சதுர நாணயங்களின் முன்பக்கத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் உள்ளதைப் போன்ற காளை உருவம் இடம் பெற்றாலும் நாணயத்தின் பின்பக்கத்தில் பாண்டியரின் மீன் சின் னத்திற்குப் பதிலாக ஒரு வட்டமும் வட்டத்திற்குள் மூன்று அல்லது நான்கு சிறு புள்ளிகளும் காணப்படுகின்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)

# 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து இந்து அமைப்புகள் வவுனியாவில் பேரணி!








வவுனியா, செப்.02

இந்து மக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று (வியாழக்கிழமை) பிரமாண்ட ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஊர்வலம் நேற்றுக் காலை 08.30 மணியளவில் வவுனியா குருமன்காடுகாளிகோயில்முன்றிலில்இருந்து ஆரம்பமாகி குருமன்காட்டு சந்தி ஊடாக சென்று, அங்கிருந்து ரயில் நிலைய வீதியின் ஊடாக நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரம் வரை சென்றது.

அதன்பின்னர் அங்கிருந்து பசார் வீதி வழியாகச் சென்று, கூசைப்பிள்ளையார் குளமூடாகவவுனியாகந்தசுவாமிகோயில் முன்றிலில் நிறைவுபெற்றது.

பசு வதையை எவ்வடிவிலும் தடுத்தல், அதனை அரசாங்கத்திற்குக் சட்டமாக்கக் கோருதல், மதமாற்றத்தைத் தடுத்தல், அதனைத் தடுக்க அரசாங்கத்தை சட்டமாக்கக் கோருதல், இந்துமதம் சார்ந்த புராதன இடங்கள் எல்லாவற்றிலும் இந்து மதம் சார்ந்தவர்கள் எந்தவித தடையும் இன்றி வணக்கம் செய்வதற்கும் வழிபாடு செய்வதற்கும் ஆவன செய்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிக்கல்விக்கு முக்கியம் கொடுத்து ஏனைய வகுப்புக்கள், நிகழ்வுகளைத் தடைசெய்து அறநெறியை வளர்த்தல், இந்து மத ஆலயங்கள், நெறிக்கழகங்கள், ஒன்றியங்கள், மன்றங்கள் எல்லோரும் தங்களுடைய அன்றாடக் கடைமைகளோடு சமுதாய வளர்ச்சிக்கு சமுதாயத் தொண்டை கட்டாயம் செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்தோடு, வவுனியா மாவட்டத்திலே பல வீதிகள் மற்றும் கிராமங்களுக்கு இந்து மதம் சார்ந்த பெயர்கள், காலக் கிரமத்தில் மாற்றப்படுகின்றன என்றும், வேறு மதம் சார்ந்து வேறு பெயர் சார்ந்து, தமக்கு எதுவிதத்திலும் தொடர்பில்லாத பெயர்கள் வருகின்றன என்றும் அவற்றையெல்லாம் நீக்கி இந்துமதம் மற்றும் தமிழ் மொழி சார்ந்த பழைமைவாய்ந்த பெயர்கள் அப்படியே இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஊர்வலம் முன்னெடுக்கப்பட்டது.

ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான இந்து மக்கள் கலந்துகொண்டமையுடன், இந்து கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வாகனஊர்திபவனியும்இடம்பெற்றிருந்தது.

ஊர்வலத்தில் நல்லை ஆதினத்தின் இரண்டாம் குருமகாசந்நிதானம், அகில இலங்கை இந்து சாசனத்தின் தலைவர் ஐயப்பதாசக் குருக்குள், வேலர் சுவாமிகள், முத்து ஜெயந்தி நாதக்குருக்கள், பிரபாகரக் குருக்கள், தமிழருவி சிவகுமாரன் உட்பட நூற்றுக்கணக்கான இந்து மதக்குருக்கள், ஆலயத்தொண்டர்கள், வர்த்தகர்கள், பொது அமைப்பினர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஈஸ்டர் தாக்குதலின் பாதிப்புக்கு வழங்கப்பட்ட நிதியில் மோசடி!

### சிக்கினார் பெண் ஒருவர்

ஈஸ்டர் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காகத் திரட்டிய நிதியை மோசடி செய்தார் எனக் குற்றம்சாட்டப்பட்ட பெண் ஒருவர் மீண்டும் அதனை வழங்குவதாக தற்போது உறுதியளித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இஷானி வீரசிங்க என்ற பெண், gofundme.com மூலம், 82 ஆயிரத்து 882 டொலரை திரட்டினார்.

இருப்பினும், திரட்டப்பட்ட நிதி பாதிக்கப்பட்ட எந்தவொரு குடும்பத்திற்கும் வழங்கப்படவில்லை என வெளிவந்த சர்ச்சைக்கு பின்னர் # Ishinigate என்ற காஸ்டக் மூலம் சமூக வலைத்தளங்களில் குறித்த சம்பவம் பரவலாகப் பேசப்பட்டுவருகின்றது.

அவர் செய்ததாகக் கூறப்பட்ட கொடுப்பனவுகளின் ரசீதுக்காக பலரால் சமூக ஊடகங்களில் விசாரிக்கப்பட்ட பின்னர், தேவாலயம் ஒன்றின் சமூகப் பிரிவான ஆல்பா ட்ரஸ்டுக்கு பணம் செலுத்தியதாக இஷானி வீரசிங்க வெளிப்படுத்தினார்.

இதனை அடுத்து, வீரசிங்க 20 ஆயிரம் கனேடிய டொலரை ஆல்பா அறக்கட்டளைக்கு 2019 ஜூன் மாதம் நன்கொடையாக வழங்கினார் என குறித்த ஃபோர்ஸ்கொயர் நற்செய்தி தேவாலயம் பேஸ்புக்கில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

அவரது வேண்டுகோளுக்கு இணங்க, குண்டுவெடிப்பால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அறிய மட்டக்களப்பில் உள்ள தேவாலயம் மற்றும் மற்றவர்களுடனும் தொடர்புகொள்வதற்கான பணியைத் தொடங்கினர்.

இருப்பினும் அரசாங்க நிறுவனங்கள், தொடர்புடைய பாதிக்கப்பட்ட தேவாலயங்கள், சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் ப்ளு - சிப் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியை செய்துவருவதாகவும் நிதியை திருப்பி அனுப்புவதாகவும் குறித்த ஆல்பா ட்ரஸ்ட் அறிவித்தது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள இானி வீரசிங்க, பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு உதவத் திரட்டப்பட்டதாக கூறப்படும் அனைத்து நிதிகளையும் கோஃபண்ட்முக்கு திருப்பித் தரும் பணியில் ஈடுபட்டுள்ளார் எனக் கூறியுள்ளார்.

## பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தை உருவாக்க அழைக்கின்றார் சஜித்!



மிகவும் பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தையும் ஆரோக்கியமான முதியோர் சமுதாயத்தையும் உருவாக்க அனைவரையும் ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அழைப்பு விடுத்துள்ளார்.

சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு முதலிடத்தை வழங்க வேண்டும் என்பதை உலகவாழ் அனைத்து மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் உலகளாவிய ரீதியில் இன்றைய காலக்கட்டத்தில் சிறுவர்கள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய உலகம் முழுவதிலும் நாள் ஒன்றுக்கு 16 ஆயிரம் சிறுவர்கள் உயிரிழக்கின்றனர். இவர்களுள் 50 சதவீதமான சிறுவர்கள் மந்த போசனத்தால் உயிரிழக்கின்றனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகம், குழந்தை திருமணம் மற்றும் குழந்தைகளை வீட்டுப் பணியாளர் சேவைகளில் ஈடுபடுத்தல் என்பன பாரிய நெருக்கடிகளாகக் காணப்படுகின்றன.

போட்டி நிறைந்த இந்த உலகத்தில் பிள்ளைகள் பெரும் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால், சிறுவர் உரிமை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையால் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேலும் வலுப்பொருந்தியதாக மாற்றவேண்டிய தேவையும் தற்போது மேலோங்கியுள்ளது. சிறுவர் தினம் போன்று முதியோர்தினமும்கொண்டாடப்படுகின்றது. முதியவர்களைக் கவனிப்பது என்பது புண்ணியமான செயலாக பௌத்த தர்மத்திலும் கூறப்பட்டுள்ளது.

ஆனால்பௌத்தநாடான இலங்கையில் 300 முதியோர் இல்லங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான பின்புலத்தில் முதியோர் தொடர்பாகப் புதிதாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டமே தற்போது உருவாகியுள்ளது.

இந்நிலையில் மிகவும் பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தையும் ஆரோக்கியமான முதியோர் சமுதாயத்தையும் உருவாக்க அனைவரும் ஒன்றிணைவோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஈரானுடனான வர்த்தக உறவை வலுப்படுத்த இலங்கை முடிவு!

வேளாண்மை தொடர்பான உபகரணங்களுக்கு ஈடாக ஈரானுடன் தேயிலை வர்த்தகத்தில் ஈடுபட இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கும் ஈரானிய தூதுவருக்கும் இடையே நடந்த கலந்துரையாட லைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஈரானில் இலங்கை தேயிலைக்கு உள்ள கேள்வி மற்றும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத விவசாய உபகரணங்களை பரிமாறிக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

ஈரானிய அரசாங்கம் இங்கு தொழிற்பயிற்சி நிறுவனங்களை நிறுவ உதவுவதோடு, நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் மகாபொல உதவித்தொகை நிதியில் வைப்பிலிடவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் 'சேம்பர் ஒவ் கொமர்ஸ்', தேயிலை வாரியம் மற்றும் ஈரானுக்கு இடையே ஓர் ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவுள்ளது.

# அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை நிர்மாணிப்பது கடன் பொறி அல்ல!

கொழும்பு, செப். 02

சீன நிதி உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதை சிலர் 'கடன் பொறி' என்று அழைத்த போதிலும், அது பெரும் அபிவிருத்தி திறன் கொண்ட ஒரு திட்டமாகும் என ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட நான்கு தூதுவர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தென் கொரியா, ஜேர்மன், வத்திக்கான் மற்றும் சுவிட்ஸர்லாந்துக்கான புதிய நான்கு தூதுவர்கள் ஜனாதிபதியிடம் நற்சான்றுப் பத்திரங்களைக் கையளித்தனர்.

இதன்போது இலங்கையில் கொரோனா தொற்றை வெற்றிகரமாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமை தொடர்பாக புதிய தூதுவர்களும் ஜனாதிபதிக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

கொழும்பைத் தளமாகக் கொண்ட புதிய தூதர்களுடனான கலந்துரையாடலின் போது, சிநேகபூர்வ உறவுகளுடன் அபிவிருத்திக்கான ஒத்துழைப்புகளுக்கு முன்னுரிமை வழங்குவதாக ஜனாபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அந்த நிகழ்வில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ மேலும் கூறியவை வருமாறு :-

பயங்கரவாதம் காரணமாகப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. விரைவான வளர்ச்சிக்கு எங்களுக்கு வெளிநாட்டு உதவி தேவைப்பட்டது.

இதன்போது, இலங்கையின் வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய சீனா முன்வந்தது. எங்கள் இருவருக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் சிலர் இந்த உறவை சீனா சார்பு என்று வர்ணித்தனர்.

மேலும், சீன நிதி உதவியுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பது பெரும் அபிவிருத்தித் திறன் கொண்ட ஒரு திட்டமாகும்.

இலங்கை ஒவ்வொரு நாட்டுடனும் நட்புடன்தான் உள்ளது. எமது நாடு, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ளது.

இந்தச் சூழலில், இலங்கை ஒரு மிதமான வெளியுறவுக் கொள்கையைத் தேர்ந்தெடுத்துள்ளது.

பரஸ்பர நன்மை பயக்கும் வளர்ச்சி ஒத்துழைப்பு எங்கள் முதலிடம். இந்த நாடு வெளிநாட்டு முதலீட்டுக்குத் திறந்திருக்கிறது.




இந்தியப் பெருங்கடல் அனைத்து நாடுகளுக்கும் திறந்த மற்றும் சுதந்திரமான மண்டலமாக இருக்க வேண்டும்.

சுமார் ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இந்தியப் பெருங்கடலை அமைதி மண்டலமாக முன்மொழிந்த முதல் நாடு இலங்கையாகும். மூலோபாய பெறுமதியான இடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை, மத்தியஸ்த வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றுகின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இருபதால் இறையாண்மையை இழக்க நேரும் என எச்சரிக்கை

### ஐ.தே.கட்சி சட்டத்தரணி கூறுகிறார்

புதிய 20 ஆவது அரசமைப்புத் திருத்த வரைவின் 3 - 57 வரையிலான பந்திகள் அரசமைப்பிற்கு எதிரானவை என்றும் அத்தகைய சூழ்நிலையில், மக்கள் தங்கள் இறையாண்மையை இழக்க நேரிடும் என்று ஐ.தே.க. எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாகவும், எதிராகவும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணையில் அக்கட்சியின் பிரதி தலைவர் ருவான் விஜேவர்த்தன சார்பாக முன்னிலையான சட்டத்தரணி இராஜ் டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் இறையாண்மை மற்றும் பௌத்த மதத்திற்கு வழங்கப்படும் முன்னுரிமையை பாதிக்க முடியாது என்றும், அரசமைப்பின் எந்தவொரு திருத்தத்தாலும் அதை மாற்ற முடியாது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த திருத்த வரைவின் 3 - 57 வரையிலான பந்திகள் அரசமைப்பிற்கு எதிரானவை என்றும் அத்தகைய சூழ்நிலையில், மக்கள் தங்கள் இறையாண்மையை இழக்க நேரிடும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த வரைவு அரசமைப்பின் அடிப்படை கட்டமைப்பிற்கு முற்றிலும் எதிரானது என்று குறிப்பிட்ட சட்டத்தரணி, வரைவின் விதிகளின்படி, முழு அதிகாரமும் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படுவதால் நீதித்துறை மற்றும் சட்டமன்றத்தின் அதிகாரங்கள் குறைந்துவிடும் என்றும் தெரிவித்தார்.

இந்த வரைவு சட்டமன்ற மற்றும் நீதித்துறையின் அதிகாரத்தை ஜனாதிபதியின் கைகளில் கொண்டுள்ளமையால் இந்த வரைவின் விதிகள் மூலம், சட்டத்தின் விதி, நிறைவேற்றுத்துறை மற்றும் நிர்வாகத்தின் மூன்று முக்கிய துறைகளில் சமநிலை ஆகியவை இழக்கப்படும் என்றும் அதுவும் அதிகாரப் பகிர்வு கொள்கைக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த வரைவு இரட்டை குடியுரிமை பெற்ற ஒருவருக்கு ஆளும் அதிகாரங்களை ஒப்படைக்கிறது என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதேவேளை இந்த வரைவின் மூலம், அரசமைப்பின் 3 மற்றும் 4 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் நீதித்துறை அதிகாரமும், மக்களின் நிறைவேற்று அதிகாரமும் மீறப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகில விராஜ் காரியவாசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதி சட்டத்தரணி ரோலண்ட் பெரேரா குறிப்பிட்டார். மேலும் இந்த வரைவு அடிப்படை உரிமைகள் மற்றும் மக்களின் உரிமையை மீறுவதாகவும் அவர் கூறினார்.

## வெளிவிவகாரச் செயலருடன் பிரிட்டிஷ் தூதுவர் சந்திப்பு



கொழும்பு,ஒக்.02

பிரித்தானிய உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன் இலங்கையின் வெளிவிவகாரச் செயலர் அட்மிரல் பேராசிரியர் ஜயனாத் கொலம்பகேவை நேற்று வியாழக்கிழமை சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போது இரு தரப்பு வர்த்தகம், முதலீட்டை ஊக்குவிப்பதற்கான ஒரு வரைபடத்தை மையமாகக் கொண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கல்வி, சுகாதாரம், சுற்றுலாத் துறைகளைப் பலப்படுத்தி ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்து இருவரும் கவனம் செலுத்தினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடுத்தகட்ட நகர்வுக்காக மீண்டும் சந்திப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள்!

யாழ்ப்பாணம்.ஒக்.02

தமிழ்த் தேசியக் கட்சிகளின் அனைத்து தலைவர்களையும் பங்கேற்கச் செய்வதற்கான விசேட கூட்டம் ஒன்றை மிக விரைவில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் விவகாரத்தை அடுத்து தற்காலிகமாக ஒன்று சேர்ந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள், தமது அடுத்த கட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் (புதன்கிழமை) தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் கூடி ஆராய்ந்தன.

யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



தியாக தீபம் திலீபனின் நினைவு நிகழ்வுக்கு அரசு பல்வேறு தடைகளை விதித்தது. இதன் காரணமாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள 10 கட்சிகள் இணைந்து அதனை எதிர்க்கத் தீர்மானித்தன.

இவ்வாறு இணைந்த கட்சிகள் ஒன்றிணைந்து அண்மையில் கதவடைப்புப் போராட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## மைத்திரியின் முடிவுகளை பாதுகாப்புச் சபையில் சவாலுக்கு உட்படுத்தும் சூழல் இருக்கவில்லை!

### முன்னாள் பொலிஸ்மா அதிபர் புஜித் ஜயசுந்தர சாட்சியம்

தேசிய பாதுகாப்பு பேரவையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஒரு முடிவு எடுக்கப்பட்டதும் முன்னாள் பிரதமர் ரணில் உட்பட எவருமே அதனை சவாலுக்குட்படுத்த முடியவில்லை என முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று சாட்சியமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தகவல் வெளியிட்ட அவர் -

தேசிய பாதுகாப்பு பேரவையில் பங்கேற்ற அனைத்து அதிகாரிகளும் சிறிசேனவால் எடுக்கப்பட்ட முடிவுகளை விமர்சிக்கவோ கருத்து சொல்லவோ அது பொருத்தமானதாக இருக்கவில்லை. சிறிசேனவால் செய்யப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக அவற்றைச் சவாலுக்குட்படுத்தும் சூழலும் இருக்கவில்லை. - என்றார் அவர்.

ஆணைக்குழு உறுப்பினர்கள் சாட்சியிடம் 2017 முதல் தேசிய தௌஹீத் ஜமா அத்தின் தலைவர் சஹ்ரான் ஹாசீம் குழுவினரது செயற்பாடுகளின் விளைவுகளை ஏன் உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை எனக் கேட்டதற்கு -

நிலைமையை நன்கு புரிந்து கொண்டேன். ஆனால் அந்த நேர அரசியல் சூழ்நிலை, நாட்டின் கொள்கை, சில கட்டுப்பாடுகள் என்பன பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தடையாக இருந்தன என ஜயசுந்தர தெரிவித்தார்.



## ரயில் பாதையின் இரு மருங்கும் வசிப்பவர்களுக்கு நிரந்தர வீடுகள்!

ரயில் பாதைகளின் இரு மருங்கிலும் சட்ட விரோதமாக வசிப்போருக்கு நிரந்தர வீடுகளைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக களனிவெலி ரயில் மார்க்கத்தின் இரு மருங்கிலும் உள்ள சட்டவிரோத குடியிருப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, மருதானை தொடக்கம் பாதுக்க வரை வசிக்கும் ஆயிரத்து 630 குடும்பங்களை வெளியேற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு நெரிசல்மிகு ரயில் செயற்றிட்டத்தின் பணிப்பாளர் பாலித சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, களனி ஆற்றின் இருபுறமும் சுமார் 4 ஆயிரம் தொழிற்சாலைகள் அனுமதி பெறாமல் இயங்குகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட அமைச்சகத்தின் அனைத்து சுற்றுச்சூழல் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போது இந்த உண்மைகள் வெளிவந்துள்ளன எனச் சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# எனது சகோதரர் ரியாஜ் நிரபராதி அதனாலேயே விடுவிக்கப்பட்டார்

## வவுனியாவில் மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் தெரிவிப்பு



வவுனியா,ஒக்.02

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட வர்த்தகர் இன்ஷாப் இப்ராஹீம், தனது சகோதரர் ரியாஜ் பதியுதீனுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டிருந்தார் என்ற காரணத்துக்காகவே, குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார் எனவும், தற்போது விசாரணைகளின் பின்னர், நிரபராதியாக இருந்தமையினாலேயே விடுவிக்கப்பட்டுள்ளார் எனவும் மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுக் காலை ஊடகவியலாளரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு சம்பவத்தில் ஒருவர் குற்றவாளியாக இருந்தால்தான் சிறையிலே அடைப்பது வழமை. அதற்கு நேர்மாறாகக் குற்றவாளி என்று நிரூபிப்பதற்கு முன்னரேயே எனது சகோதரரை கைது செய்து, தடுப்புக் காவலில் வைத்தனர்.

'இரு தினங்களில் விடுவிக்கப்படுவார்' என்று அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழே அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். சுமார் ஐந்தரை மாதங்களின் பின்னர், சகோதரர் ரியாஜ் இப்போது விடுவிக்கப்பட்டுள்ளார்.

'எனது சகோதரர் நிரபராதி. எந்தவொரு குற்றச்சாட்டுக்களுடனும் அவர் தொடர்புடையவர் அல்லர்' என நான் முன்னரே கூறியிருந்தேன். நீதி என்றோ ஒருநாள் வெல்லும் என்றும் ஊடகங்களிடம் பல முறை தெரிவித்திருந்தேன். எனினும், எவ்வாறான விசாரணைகளுக்கும் அவர் ஒத்துழைப்பை வழங்குவார் என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த நிலையில், ஐந்தரை மாதங்கள் கடந்து, எந்தக் குற்றச்சாட்டுக்களுடனும் தொடர்பில்லை என்ற காரணத்தினால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். இதற்காக இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். ஒரு சம்பவத்திற்காக விசாரணை மேற்கொள்ளும்போது, குற்றவாளியாக இருந்தால்தான் சிறையில் அடைப்பது வழமை என்று சட்டத்தரணிகள் கூறுகின்றனர். அதற்கு நேர்மாறாக, எனது சகோதரர் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட முன்னரேயே கைது செய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

நூற்றுக்கணக்கான உயிர்களை பலியெடுத்த, 500க்கும் மேற்பட்டவர்களை காயப்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அதற்கு எமது பூரண ஆதரவு என்றும் உண்டு எனவும் தெரிவிக்கின்றோம். – என்று கூறினார்.

# '20' குறித்து மு.க. முறையான தீர்மானத்தை எடுக்கவில்லை

## பிரதித் தலைவர் ஹாபீஸ் நஸீர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.02

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ள நிலையில், அது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவு இன்னும் முழுமைபெறாத நிலையில் உள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

இதற்கமைய, 20 ஆவது திருத்தம் தொடர்பில் பொறுமையாகச் செயற்பட்டு, இறுதி நேரத்திலேயே சரியான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்த விடயம் தொடர்பில் சிறுபான்மையினக் கட்சிகள் ஒன்றிணைந்து கலந்துரையாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நல்லாட்சி அரசுக்கு சிறுபான்மையினக் கட்சிகள் ஆதரவு வழங்கிய போதிலும், நல்லாட்சி அரசு சிறுபான்மையின மக்களை ஏமாற்றியுள்ளது. – எனவும் ஹாபீஸ் நஸீ அஹமட் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 2ஆம் தவணை விடுமுறை குறித்து கல்வி அமைச்சின் விசேட அறிவிப்பு

கொழும்பு,ஒக்.02

கொரோனா வைரஸ் பாதிப்பு விடுமுறைக்குப் பின்னர் கற்றல் செயற்பாடுகள் மீளவும் ஆரம்பித்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இரண்டாம் தவணை விடுமுறை குறித்து கல்வி அமைச்சு விசேட அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

அரச பாடசாலைகள் மற்றும் அரச அனுமதியுள்ள தனியார் பாடசாலைகளில் இவ்வருடத்தில் இரண்டாம் தவணை ஒக்டோபர் 09ஆம் திகதி நிறைவடையவுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் அன்று முதல் இரண்டாம் தவணை விடுமுறை ஆரம்பமாகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் தவணைக்காக மீண்டும் பாடசாலைகள் நவம்பர் மாதம் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லாட்சியில் ஐ.எஸ். குறித்து எச்சரித்தேன்

## விசாரணை ஆணைக்குழு முன் விஜயதாஸ எம்.பி. சாட்சியம்



கொழும்பு,ஒக்.02

இலங்கையர்கள் பலர் இஸ்லாமிய இராஜ்ஜியத்துடன் (ஐ.எஸ்.ஐ.எஸ்.) தொடர்புபட்டுள்ளனர் என்ற உண்மையை நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன். அப்போதைய அரசு இந்த எச்சரிக்கை குறித்து கவனம் செலுத்தியிருந்தால் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் அதுபோல் ஐக்கிய தேசியக் கட்சியின் அழிவு மற்றும் அதிகாரம் இழப்பு ஆகியன தவிர்க்கப் பட்டிருக்கும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், விஜயதாஸ ராஜபக்ஷவை குறுக்கு விசாரணை செய்ய விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இவ்விருவரும் ஆணைக்குழு முன் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

முன்னதாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் விஜயதாஸ ராஜபக்ஷ ஆஜரான போது, பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வழங்கியிருந்தார். முஜிபுர் ரஹ்மானின் பெயரும் அதில் இருந்தது.

குறுக்கு விசாரணையின்போது விஜயதாஸ ராஜபக்ஷவிடம் என்ன அடிப்படையில் எனது பெயர் அப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட து? என்று முஜிபுர் ரஹ்மான் கேட்டார். அதற்கு விஜயதாஸ ராஜபக்ஷ பதிலளிக்கையில் –

ஒருவரின் பெயர் மட்டுமல்ல பலரது பெயர்களைக் குறிப்பிட்டேன். எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், அஸாத் ஸாலி ஆகியோரையும் குறிப்பிட்டேன்.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் தனது 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதிய அறிக்கையை மறுத்தனர். அது இலங்கையர்கள் பயங்கரவாதத்துடன் இணைந்துள்ளனர் என்பதாகும். நாடாளுமன்றில் என்னால் விடுக்கப்பட்ட இந்த அறிக்கையை மறுத்ததன் மூலம் பயங்கரவாதத்தை இவர்கள் நியாயப்படுத்தினர்.

அந்த நேரம் அரசு எனது அறிக்கை குறித்து கவனம் செலுத்தியிருந்தால் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் அழிவு மற்றும் அதிகாரம் இழப்பு ஆகியன தவிர்க்கப்பட்டிருக்கும். – என்றார்.

# தடை செய்யப்பட்ட ட்ரோலர் மீன்பிடியை 4 மாவட்டங்களில் அனுமதிக்கத் தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஒக்.02

இலங்கையில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள ட்ரோலர் மீன்பிடியை 4 மாவட்டங்களில் – ஐந்து குறிப்பிட்ட பிரதேசங்களில் – சட்டபூர்வமாக அனுமதிப்பது என கடந்த வெள்ளியன்று கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜயசேகரா தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கினிகம் பிரசன்ன, சட்ட உத்தியோகத்தர் குமாரி விதானகே ஆகியோருடன் நான்கு மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்டங்களில் உள்ள ட்ரோலர் மீன்பிடி சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்டங்களின் நிலைவரத்திற்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலும் அனுமதிப்பதற்காக ஏற்கனவே நாரா அமைப்பினால் இனம் காட்டப்பட்டு வரைபடம் தயாரிக்கப்பட்ட பகுதிகளில் ட்ரோலர் மீன்பிடிக்கு சட்டபூர்வ அனுமதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை சட்ட உத்தியோகத்தர் ஊடாக மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் தலைமன்னாரிற்கும் பேசாலைக்கும் இடைப்பட்ட 427 சதுர கிலோ மீற்றர் பரப்பளவிலும் –

யாழ்ப்பாணத்தில் அனலைதீவிற்கே 15 கடல்மைல் தொலைவிலும், நெடுந்தீவிற்கும் கச்சதீவிற்கும் இடைப்பட்ட பகுதியென இரு இடங்களில் 400 சதுர கிலோமீற்றர் பகுதியிலும் – இந்த அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதைத் தவிர புத்தளம் மாவட்டம் கற்பிட்டிப் பகுதியிலும், அம்பாறை மாவட்டம் கல்முனைக் கடலிலும் இரு கடற் பிரதேசங்களில் ட்ரோலர் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்படவிருக்கின்றது.

இந்த அனுமதியினை சட்ட பூர்வமாக வழங்குவதற்கான ஏற்பாட்டினை மேற்கொள்ள ஆவன செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை ட்ரோலர் மீன்பிடியைத் தடை செய்ய வலியுறுத்தி நீண்டகாலமாக பல மீனவ சங்கங்கள் தொடர் போராட்டங்களை நடத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## மாகாண சபைகள் விடயத்தில்

# டில்லியின் தலையீடு இருக்கவே கூடாது!

### சரத் வீரசேகர வலியுறுத்து



கொழும்பு, செப்ரெம்பர் 01

மாகாண சபைகள் விடயத்தில் இந்தியாவால் தலையிடவோ அல்லது கட்டாயப்படுத்தவோ முடியாது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் எனவும், இது தொடர்பாக எமது ஜனாதிபதியினால் மட்டுமே தீர்மானம் எடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுக்கை பகுதியில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கை என்பது சுதந்திரமான இறையாண்மை கொண்ட நாடு. இதில் வெளியாரின் தலையீடுகள் இருக்கக் கூடாது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவே அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதன்படி இந்தியா பல நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. அவற்றில் ஒன்றான விடுதலைப்புலிகளை நிராயுதபாணியாக்கும் நிபந்தனையை இந்தியா நிறைவேற்றவில்லை.

இதனால், அந்த ஒப்பந்தம் எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பது கேள்விக்குரியதாக உள்ளது – என்றார்.

## முல்லைத்தீவிலும் உறவுகள் வியாழன் கறுப்புக் கொடிகளுடன் போராட்டம்!




(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு, ஒக்.01

முல்லைத்தீவுமாவட்டவலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று சர்வதேச சிறுவர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டித்து கறுப்புக் கொடிகளுடன் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நீதி கோரி கடந்த 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று ஆயிரத்து முந்நூற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது

இந்தநிலையில், அவர்கள், 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போர் முடிவடைந்து இராணுவத்திடம் சரணடையும்போது ஒப்படைத்த தமது சிறுவர்களுக்கு இது வரை எந்தவித பதிலும் அரசு வழங்காத நிலையில் தமது பிள்ளைகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி இன்றைய சர்வதேச சிறுவர் தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பதாகத் தெரிவித்து கறுப்புக் கொடிகளை ஏந்திக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு – மாங்குளம் வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கக் கட்டடத்துக்கு முன்பாக இன்று காலை 10 மணி முதல் சுமார் ஒரு மணித்தியாலம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் வரும்வரை சிறுவர் தினம் எமக்குக் கரிநாளே

### அம்பாறை காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி தெரிவிப்பு



அம்பாறை, ஒக்.01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது சிறுவர்கள் எமது கைவந்து சேரும் வரை சர்வதேச சிறுவர் தினம் எமக்குக் கரிநாளே.

– இவ்வாறு அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி இன்று முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பத்து வருடங்க்ளுக்கு முன்பு போரின் போது சரணடைந்த எங்கள் குழந்தைகள் எங்கே? சிறுவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய வேண்டிய இலங்கை அரசு எமது சிறார்களைக் காணாமல் ஆக்கியுள்ளது. இவ்வாறு காணாமல் ஆக் கப்பட்ட குழந்தைகள் இலங்கை அரசுக்கு என்ன செய்தார்கள்?

இவ்வாறானதொரு நிலை எதிர்காலத் தில் வரக்கூடாது என்பதற்காகவே இந்தச் சர்வதேச சிறுவர் தினத்தை கரி நாளாகப் பிரகடப்படுத்தியுள்ளோம்.

இலங்கை அரசால் காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பில் நீதி கோரி மகஜர் ஒன்றை மின்னஞ்சல் ஊடாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு இன்று அனுப்பிவைத்துள்ளோம் – என்றார். இந்தக் கவனயீர்ப்புப் போராட் டத்தில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் உறுப்பினர்கள், சிறுவர்கள் எனப் பலரும் கலந்துகொண் டனர்.

## கொழும்பில் டெங்கு

கொழும்பு மாவட்டத்தில் இந்த வருடம் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் அடையாளம் காணப்பட்ட முழு மையான டெங்கு நோயாளர்களின் எண் ணிக்கை 27 ஆயிரத்து 733 ஆகும். அதில் 3 ஆயிரத்து 675 பேர் கொழும்பில்

அடையாளம் காணப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் . 3 ஆயிரத்து 040 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கையில் மீண்டும் எலிக் காய்ச்சல்!

### இரத்தினபுரியில் அதிகமானோர் பாதிப்பு

இலங்கையில் எலிக் காய்ச்சல் குறித்து சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மழைக் காலங்களில் எலிக் காய்ச்சல் பரவும் ஆபத்து இருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுகத் சமரவீர தெரிவித்தார்.

அத்துடன், இதுவரை 6 ஆயிரத்து 96 பேருக்கு இதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன எனவும், இவர்களில் அதிகமானோர் இரத் தினபுரி மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

இரத்தினபுரி மாவடடத்தில் மட்டும் இதுவரை 1,341 பேருக்கு இந்த அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இதுவரை இந்த நோயின் அறிகுறிகள் இருந்த 70 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

அத்துடன், அநுராதபுரம், கேகாலை, களுத்துறை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களிலும் எலிக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எங்கே எங்கள் சிறார்கள்? கோட்டா அரசே பதில் சொல்!

### யாழில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம்,செப்.01

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவினர்களால் யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மத்திய பஸ் நிலையத் துக்கு முன்பாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, பஸ் நிலையத்தில் இருந்து பேரணியாகச் சென்ற போராட்டக்காரர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்துக்கு முன்பாகப் போராட்டத்தை நிறைவு செய்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி வேண் டியும், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் உள்ளிட்டவற்றைக் கண்டித்தும் இந்த போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இராணுவத்தினிடம் கையளிக் கப்பட்ட உறவுகளுடன் கொண்டு செல்லப்பட்ட எமது சிறுவர்கள் எங்கே?, இராணுவத்தினராலும், துணை இராணுவக் குழுக்களினாலும் பிடித்துச் செல்லப்பட்ட எமது சிறு வர்கள் எங்கே?, எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது கோசம் எழுப்பினர்.

அத்துடன் எங்கள் குழந்தைகள் எங்கே? இதற்குப் பதில் கூற யாரும் இல் லையா?, எங்கே எங்கே எங்கள் அப்பா எங்கே?, எங்கே எங்கள் சிறார்கள்? கோட்டா அரசே பதில் சொல்..! போன்ற பதாகைகளையும் போராட் டத்தில் ஈடுபட்ட சிறுவர்கள் தாங்கியிருந்தனர்.

# வடக்கில் உள்ள பிரச்சினைகளே தெற்கிலும் இருக்கின்றனவாம்!

## இராஜங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ வவுனியா நிகழ்வில் நேற்றுத் தெரிவிப்பு

வடக்கில் இருக்கின்ற பிரச்சினைகளே தெற்கிலும் இருக்கின்றன என உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் திஸ்ஸமாகாராமை பகுதியின் சுவாத்திய நிலைமைகளை வவுனியாவிலும் உணர முடிகிறது. உண்மையில் வடக்கில் இருக்கின்ற பிரச்சினைகள் தான் தெற்கிலும் இருக்கின்றன. அந்தப் பிரச்சனைகள் என்ன என்பதை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதில் அந்த வெற்றி இருக்கிறது. எமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாணை மக்களது தேவைகளை துரிதமாகவும், சிறப்பாகவும் நிறைவு செய்வதே.

பிரதேச செயலகப் பிரிவுகளில் இருக்கின்ற பிரச்சினைகள் என்ன, அவற்றுக்கு என்ன தீர்வு எடுக்கலாம் என்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். அலுவலகங்களில் பணியாற்ற வசதிகள் போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். அதனை செய்து கொடுக்க வுள்ளோம். பிரதேச செயலாளர்கள் பலரின் விடுதிகள் சீர் செய்ய வேண்டியுள்ளது. அதனை செய்து கொடுக்க வேண்டியுள்ளது.

கிராமிய மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். மக்களது பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து அதனை தீர்ப்பதற்கு அரசுக்குக் கோரிக்கை விடுவோம். கடந்த தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத் திற்குச் சென்றேன். அங்கு இருக்கும் மக்களுக்கு குடி தண்ணீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாகவுள்ளது. அந்த பிரச்சனையை தீர்க்க மழை நீர் சேகரிப்பு திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.

அரச அலுவலகங்களுக்கு வருகின்ற மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றனவா என்பது குறித்தும் கவனம் செலுத்தி வருகின்றோம். மக்களுக்கு காணிக்கான உறுதிப் பத்திரங்கள் இல்லாமை, காணிப் பிரச்சினைகள், குடிதண்ணீர்ப் பிரச்சினை என்பன காணப்படுகின்றன.



சிலர் வன ஓதுக்கீட்டுக்கான காணிகளுக்கு உறுதி பெறுகின்றனர். இதனைத் தடுக்க வேண்டும். மக்களுக்கான காணிகளை வழங்க வேண்டும். அரச அதிகாரிகள் சிலர் மக்களுக்கு சிறப்பாக வேலை செய்கிறார்கள். சிலர் மக்களிடம் ஏதாவது பெற்றுக் கொண்டு வேலை செய்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றப்பட்டு மக்களுக்கு உண்மையாக பணியாற்ற வேண்டும். அரச உத்தியோகத்தர்கள் ஊக்கத்துடன் அர்ப்பணிப்புடன் வேலை செய்ய வேண்டும். மக்களது தேவைகளை நாம் இனங்கண்டு அதனை துரிதமாக தீர்க்க வேண்டும். – என்றார்.

## கட்டுநாயக்க விமான நிலையம் தற்போதைக்குத் திறக்கப்படாது

### அரசாங்கத் தரப்பில் தெரிவிப்பு

கொரோனா பரவலை அடுத்து மூடப்பட்டுள்ள கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை திறக்கும் தீர்மானம் தற்போதைக்கு இல்லை என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஆப்கானிஸ்தான் தூதுவர் மொஹமட் அஷ்ரப் ஹய்தாரி நேற்று மாலை அமைச்சர் ரணதுங்கவை சந்தித்துப் பேசினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சுகாதாரத் துறையினர் மற்றும் கொவிட் – 19 வைரஸ் தடுப்புப் படையணியின் ஆலோசனையின் பின்னரே கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் திறக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல, கொரோனா வைரஸ் குறித்த எந்தவித உறுதியான முடிவும் இன்றி விமான நிலையத்தை திறந்தால் நாட்டு மக்களுக்கே ஆபத்து ஏற்படும் என்று அவர் கூறியுள்ளார்.

## பதிவு செய்யாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாதனங்கள் அனைத்தும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் அனுமதி பெற்று பதிவு செய்யப்பட்டவையா என உறுதிப்படுத்துமாறு, பாவனையாளர்களுக்கு ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட தொலைத்தொடர்பு சாதனங்களில் இணைக்கப்பட்டுள்ள சிம் அட்டைகளால் இயங்கும் சாதனங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும் எனத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓத சேனாநாயக்க தெரிவித்தார்.

தனிப்பட்ட நபர்கள் இணையத்தளம் உள்ளிட்ட ஏனைய வழிகளின் ஊடாக இவ்வாறான தொலைத்தொடர்பு சாதனங்களை இறக்குமதி செய்யும் அல்லது கொண்டு வரும் நபர்கள் இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.trc.gov.lk) வழியாகப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

தங்களது தொலைத்தொடர்பு உபகரணங்களில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்டிக்கர் உள்ளதா எனச் சரிபார்ப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் அதன் நம்பகத்தன்மையை அறிய முடியும் என்பதோடு, இதற்காக 15 இலக்கங்கள் கொண்ட சர்வதேச தொலைபேசி சாதன அடையாள இலக்கத்தை IMEI 1909 எனும் இலக்கத்துக்கு எஸ்.எம்.எஸ். செய்வதன் மூலம் அறிய முடியும். (IMEI இடைவெளி 15இலக்க IMEI இலக்கம்)

IMEI இலக்கத்தை அறிய 06எனடயல்செய்யவேண்டும்.

பயனர்களுக்கு தீங்கு விளைவிக்கும் அதிக கதிர் வீச்சை வெளியிடும் போலியான மற்றும் உரிய தரத்தில் தயாரிக்கப்படாத கையடக்க தொலைபேசிகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சாதனங்கள் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என ஓத சேனாநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, நேற்று முதல், சிம் அட்டைகள் மூலம் இயக்கப்படும் பதிவு செய்யப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்களில் காணப்படும் சிம் அட்டைகள், அந்தந்த தொலைபேசி வலையமைப்பினால் செயலிழக்கப்படும், அதே நேரத்தில், அத்தகைய உபகரணங்களை அதன் உறுதித் தன்மையை அறிந்து பதிவு செய்ய ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஓதா சேனாநாயக்க மேலும் கூறினார்.

## மன்னார் நானாட்டானில்...

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இச்சின்னங்களே சற்றுப் பிற்பட்ட காலத்தில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சது. வடிவிலான நாணயங்களின் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. ஆனால் நாணயங்களின் முன்பக்கத்தில் காளைக்குப் பதிலாக சிங்கள மன்னர் வெளியிட்ட நாணயங்களில் சிங்கம் முக்கிய இலச்சினையாக இடம்பெற்றுள்ளது. இவற்றில் இருந்து சிங்கள மன்னர்கள் சிங்கத்தையும், தமிழர்கள் காளையையும் (நந்தி) தமது அரச இலச்சினையாகக் கொண்டு ஆட்சி செய்துள்ளனர். இம்மரபு பிற்காலத்திலும் தொடர்ந்துள்ளது. நாணயங்களின் பின்பக்கத்தில் உள்ள சின்னங்களில் காணப்படும் ஒற்றுமை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறித்திருக்கலாம்.

கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட சதுர வடிவிலான நாணயங்களில் அவர்களின் அரச இலச்சினையான மீன் சின்னம் கோட்டுருவில் பொறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் கிடைத்த சதுர நாணயங்களில் அவை முழு உருவமாகவே பொறிக்கப்பட்டுள்ளன. இந்த வேறுபாடு வடஇலங்கையில் கிடைத்த மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களிலும் காணப்படுகின்றன.

நானாட்டானில் கிடைத்த நாணய வகைகளில் மூன்று கோடுகளால் அமைந்த பீடத்தின் மேலேயே நந்தியும், மீன் சின்னங்களும் காணப்படுகின்றன. இந்த அம்சம் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் பௌத்த சின்னங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது இலங்கை நாணய மரபுக்குரிய தனித்துவமான அம்சமாகும். இந்த அம்சம் தமிழக நாணயங்களிலோ அல்லது இந்திய நாணயங்களிலோ காணப்படவில்லை. பாண்டியர் இன்னொரு நாட்டை வெற்றிகொண்டு ஆட்சி செய்யும் போது தாம் வெளியிட்ட நாணயங்களில் தமது அரச இலச்சினையான மீனையே பொறித்தனர். ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் புதிய அரசைத் தோற்றுவித்த பாண்டியரின் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் மீனுக்குப் பதிலாக நந்தியையே அரச இலச்சினையாக நாணயங்களிலும், அரச கொடிகளிலும், அரச ஆவணங்களிலும் பயன்படுத்தினர். இதற்கு யாழ்ப்பாண அரசிற்கு முன்னோடியாக நந்தியை அரச இலச்சினையாகக் கொண்ட தமிழ் அரசு வடஇலங்கையில் இருந்தது காரணம் எனலாம். ஆயினும் யாழ்ப்பாண இராசதானிக்கு முற்பட்ட நாணயங்களில் நந்தியின் வடிவம் மூன்று கோடுகளாலால் அமைந்த பீடத்திற்கு மேல் காணப்படுகின்றது. ஆனால் யாழ்ப்பாண இராசதானி கால நாணயங்களில் பீடத்திற்குப் பதிலாக சேது என்ற மங்கல மொழி பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்ப்பாண இராசதானியை முதலில் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள் தமிழ் நாடு இராமேஸ்வரம் சேது தலத்துடன் தமக்குள்ள தொடர்பை அடையாளப்படுத்திக் கொண்டனர் எனக் கூறலாம்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொலன்னறுவை இராசதானியில் கலிங்கமாகன் ஆட்சியால் வெறுப்படைந்த சிங்கள மக்களும், சிங்கள அரசும் தெற்கு நோக்கி நகர்ந்த போது வடக்கே தமிழருக்குச் சார்பான அரசு கலிங்கமாகன், சாவகன் தலைமையில் தோன்றியதாகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வரசின் படைகள், பாதுகாப்பு அரண்கள் திருகோணமலை, கந்தளாய், பதவியா, குருந்தன் குளம், கோணாவில், மன்னார், மாதோட்டம், இலுப்பைக்கடவை, காக்கதீவு, ஊர்காவற்துறை, வலிகாமம் முதலான இடங்களில் நிலைகொண்டிருந்தன என இவ்விலக்கியங்கள் மேலும் கூறுகின்றன. இதைச் சமகாலத்திற்குரிய பாண்டியரது கல்வெட்டும் உறுதி செய்கின்றது. இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது மன்னார் நானாட்டனிலும், வடஇலங்கையின் ஏனைய வட்டாரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, மீன் சின்னங்கள் பொறித்த நாணயங்களை யாழ்ப்பாண அரசுக்கு முன்னோடியாக வடஇலங்கையில் நந்தியை அரச இலச்சினையாகக் கொண்டு ஆட்சிபுரிந்த தமிழ் அரசால் வெளியிடப்பட்டவை எனக் கூறுவதே பொருத்தமாகும்.

(குறிப்பு:– ஆதிகால, இடைக்கால இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்களின்முன் பக்கத்தில் நந்தியும், நாணயங்களின்பின்பக்கத்தில் மீன் வடிவங்களும் முக்கியசின்னங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் நந்தியின் வடிவம் அரச இலச்சினையையும், மீன் சின்னங்கள் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் கடல்சார் தொடர்புகள் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் பிரதிபலிப்பனவாக இருக்கலாம். மூன்று ஆண்டுகள் தமிழகத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அங்குள் அருங்காட்சியங்கள் பலவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

நாணயங்களையும், தனிநபர்களின் சேகரிப்பிலுள்ள நாணயங்களையும் நேரில் பார்வையிட்டு ஆராயும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. ஆனால் இலங்கையில் கிடைத்துள்ள மேற்மேற்கூறப்பட்ட சின்னங்கள் கொண்ட நாணயங்களை அங்கு காணமுடியவில்லை.

கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேல் தமிழகத்தின் குக்கிராமங்களுக்கெல்லாம் சென்று நாணயங்களைச் சேகரித்து பதினைந்துக்கு மேற்பட்ட நூல்களையும், நூற்றுக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகளையும் வெளியிட்ட தஞ்சாவூர் அளக்குடி ஆறுமுகம் சீதாராமனுடன் பல தடவைகள் இலங்கையில் கிடைத்து வரும் நாணயங்கள் பற்றி கலந்துரையாடமுடிந்தது. அவர் நந்தியும், மீன்சின்னமும்பொறித்த நாணயங்களின் வடிவமைப்பும், அவற்றின் கலை மரபு, தொழில்நுட்பத் திறன், அழகு என்பவற்றை தமிக நாணய மரபிற்கு அந்நியமானவை என்றே உறுதிபடக் கூறுகின்றார். ஆகவே யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னர் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தமிழ் நாணயங்கள் அனைத்தும் தமிழகத்தில் இருந்து கொண்டுவரப்பட்டவை என்ற பாரம்பரிய நம்பிக்கையை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தி, அவற்றை இலங்கை மண்ணோடொட்டி வாழ்ந்து வரும் தமிழருடன் தொடர்புபடுத்திப் பார்ப்பதே பொருத்தமாகும். அதன் மூலம் இலங்கைத் தமிழர் வரலாற்றுக்கு புதுமுகவரி கிடைக்கும்.

# ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மீண்டும் கணக்காளர் நாயகத்தின்கீழ் வரும்

## 20 ஆவது திருத்தத்தில் அதற்கும் ஏற்பாடு

கணக்காளர் நாயகத்தின் கீழ் ஜனாதிபதியின் செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தை கொண்டுவருவதற்கு 20 ஆவது திருத்தத்தில் அரசாங்கம் ஒரு திருத்தத்தை மேற்கொள்ளும் என அறியமுடிகின்றது.

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்த வரைவில் மேலும் சில திருத்தங்களை அரசாங்கம் முன்வைக்கும் என சட்டமா அதிபர் ஏற்கனவே நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

அதன்படி நாடாளுமன்றத்தில் இடம்பெறும் குழுநிலை விவாதத்தின்போது 20 ஆவது திருத்தத்தில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட மாற்றங்களை அரசாங்கம் கொண்டுவரும் என்றும் அதில் பெரும்பாலானவை பொறிமுறை மாற்றங்களாக இருக்கும் என்றும் அறியமுடிகின்றது.

குறிப்பாக முன்னர் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகத்தைக் கணக்காளர் நாயகத்தின் கீழ் இருந்து விலக்கியதற்காக அரசாங்கத்திற்கு எதிராகப் பல விமர்சனங்கள் எழுந்தன.

மேலும் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னரே நாடாளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் என்ற ஒரு விதியும் அதில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் வர்த்தமானி செய்யப்பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் ஒரு வருடத்தில் ஜனாதிபதியால் நாடாளுமன்றத் தைக் கலைக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவித்தமைக்கு அமைவாக அரசாங்கம் குழுநிலை விவாதத்தின்போது 20 ஆவது திருத்த வரைவுக்காக இவ்வாறான சில திருத்தங்களை முன்வைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இயற்கை வளத்தை பாதுகாக்கவும் நிர்வகிக்கவும் இலங்கை உறுதி!

## ஐ.நாவில் ஜனாதிபதி

இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும், அதனை முறையாக நிர்வகிக்கவும் இலங்கை அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் நிலையான அபிவிருத்திக்கான பல்லுயிர் தொடர்பான அவசர நடவடிக்கை என்ற கருப்பொருளின் கீழ் நடைபெற்ற உச்சி மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையில் இரண்டு யுனெஸ்கோ இயற்கை பாரம்பரிய தளங்கள் உள்ளன. அதில் மத்திய மலைக்காடு மற்றும் சிங்கராஜா மழைக்காடுகள் அடங்குகின்றன என அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு தனித்துவமான மற்றும் வளமான பல்லுயிர்களுக்கு பங்களிப்பு செய்யும் இந்த இயற்கை சொத்துக்களைப் பாதுகாக்கவும், நிலையான முறையில் நிர்வகிக்கவும் இலங்கை உறுதிபூண்டுள்ளது என அவர் கூறினார்.

உலகளவில் பல்லுயிர் பெருக்கத்தில் சரிவு காணப்பட்ட போதிலும், சமீபத்திய தசாப்தங்களில், பல்லுயிர் தொடர்பான மாநாட்டின் மிகைப்படுத்தப்பட்ட உணர்வை நிலைநிறுத்த இலங்கை உறுதியளித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

அத்தோடு இயற்கைக்கும் மக்களுக்கும் இடையிலான உறவிலும் சமகால உலகளாவிய சுற்றுச்சூழல் நிர்வாகத்திலும் மாற்றத்திற்கான முக்கிய தேவை உள்ளது என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பண்டைய ஆட்சியாளர் ஒருபோதும் நிலத்தின் உரிமையாளர் அல்ல என்ற கருத்தின் அடிப்படையில் வெறுமனே நாட்டு மக்களே அனைத்து உயிரினங்களின் சார்பாக அதன் பராமரிப்பாளராக இருக்கிறார்கள் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி
•டென்மார்க்
•நெதர்லாந்து
•இத்தாலி
•சுவிஸ்
1150/= Kg



எமது நேரடிக்கிளைகள்
0768226240

# 2021 இல் 450 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்துவதற்கு அரசு தயார்

2021 ஆம் ஆண்டில் 450 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்த தயாராக உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் , நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.அட்டிகல மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி லக்ஷ்மன் ஆகியோர் நடத்திய கூட்டு ஊடக சந்திப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மூவரும் சர்வதேச மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் செய்த சமீபத்திய இறையாண்மை ஒப்பீட்டை கடுமையாக விமர்சித்தனர்.

கடன்களை பூர்த்தி செய்யப் போதுமான இருப்பு உள்ளது எனக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இதில் எந்தவிதமான இடையூறுகளும் ஏற்படா என்றும் உறுதியளித்தார்.

அதேநேரம் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும், கடன்களைப் பூர்த்தி செய்ய துல்லியமாக இருப்புக்களைப் பாதுகாக்கவும் அரசாங்கம் முன்னரே நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கி மதிப்பீடுகளின்படி, இறக்குமதி மற்றும் எரிபொருள் பில்கள் குறைக்கப்படுகின்றமையால் இலங்கையை சுமார் 2 பில்லியன் டொலர் மிச்சப்படுத்தும், இது இருப்புக்களை உயர்த்த உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தமும் நிராகரிக்கப்படவில்லை என்றும் கப்ரால் தெரிவித்தார். அத்தோடு இந்த ஆண்டின் தொடக்கத்தில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட வீழ்ச்சியைச் சமாளிக்க அறிமுகப்படுத்தப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தை பெற்றுக்கொள்ள இலங்கை ஆர்வம் காட்டவில்லை என்றும் கூறினார்.

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
10.10.2020 காலை 08.00 மணிக்கு
(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பபிரிவு
மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா
கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21
➜ ஆராய்ச்சி நிலையம்,
➜ பண்ணை (New Zealand Farm),
➜ Tissue Culture Lab,
➜ Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

மணமகள் தேவை
1990, யாழிந்து (V), மகம், Software Engineer, Singapore சாவகச்சேரியை சேர்ந்த மணமகன் (Profile 4766). விபரங்களுக்கு இணையவழி திருமணசேவை www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd, Bambalapity, Colombo 04. அலுவலகம் காலி வீதி பம்பலப்பிட்டி கொழும்பிலுண்டு (வேறு எங்கும் கிளைகள் கிடையாது). தரகர் கூலி இல்லை, 50% பதிவு கட்டணம். அழையுங்கள் 076 664 9401.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி – 30.03.1985
மதம் – இந்து P
நட்சத்திரம் – புனர்பூசம் 2
பாவம் – 60 1/4
செவ்வாய் – 7 இல் 32 புள்ளி
கல்வி – A/L
தொழில் – Swiss PR இல்லை
எதிர்பார்ப்பு – ஐரோப்பாவில் விசா உள்ள பெண் தேவை.

மணமகள் விவரம்
பிறந்த திகதி – 20.09.1987
மதம் – இந்து P
நட்சத்திரம் – ஆயிலியம்
பாவம் – 20
செவ்வாய் – 2 இல் 8 புள்ளி
கல்வி – A/L
தொழில் – பிரான்ஸ் PR
எதிர்பார்ப்பு – இலங்கை அல்லது விசா இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள். முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2020 இல் வெளியிடப்பெற்றது.